May 2010
Issue : 29

07 SEP 2010

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை



இலக்கிய வித்தகர்
**அநு.வை.நாகராஜன்**





நூலகவியலாளர்
'நூல் தேட்டம்'
**என்.செல்வராஜா**



50/=

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை-இலக்கிய-பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்

ர்கழி : 2010
வீச்சு : 29

# திருமண சேவை

**வேல் அமுதனிடம் இன்று**
**33 Fully Qualified Accountants!**

**புள்ளி விபரம்**

முழுமையான தகுதிவாய்ந்த கணக்கியலாளர்

| | நாடு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | Sri Lanka | 02 | 12 | 14 |
| 2. | UK | 07 | 04 | 11 |
| 3. | Australia | 04 | 01 | 05 |
| 4. | Middle East | 03 | 00 | 03 |
| 30.04.2010 | மொத்தம் | 16 | 17 | 33 |



✦ **தெரிவு**

வேல் அமுதன் திருமண ஆலோசனையகத்தில் அங்கத்தவராகி, மேலதிக விபரங்களைத் தெரிந்து - தங்கள் மனம் விரும்பும் வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யலாம்!

✦ **தொடர்பு**

திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ; சனி, ஞாயிறு நண்பகலிலோ "சுய தெரிவு முறை முன்னோடி" தனிமனித நிறுவநர், சர்வதேச, சகலருக்குமான திருமண ஆலோசகர் / ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல்அமுத னுடன் தொடர்பு கொண்டு வரன்முறையைத் தெரிந்து கொள்ளலாம்!

✦ **தொலைபேசி**

2360488 - (வாடிக்கையாளருக்கு மாத்திரமென ஒதுக்கப்பட்டது)
2360694 / 4873929

✦ **ஆலோசனையகம்**

8.3.3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு எதிராக, நிலப் பக்கம், 33 ஆம் ஒழுங்கை வழி) 55 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு -06.

✦ **சந்திப்பு :**

தாங்களோ, தங்களின் பிரதிநிதியோ வேல் அமுதனை முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் சந்திக்கலாம்!

✦ **விசேஷ குறிப்பு :**

வாடிக்கையாளர் வேல்அமுதனுடன் தொடர்புகொள்ளும்போது, தவறாது தொடர்பு இலக்கத்தைக் குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளும் வண்ணம் வேண்டப் படுகின்றனர்.



"இலட்சியம் இல்லாமல்
இலக்கியம் இல்லை"

# செங்கதிர்

▶தோற்றம் : 30.01.2008◀

**29**

வைகாசி 2010 (தி.வ ஆண்டு 2041)

▶3வது ஆண்டு◀

ஆசிரியர் : செங்கதிரோன்
துணை ஆசிரியர் : அன்பழகன் குரூஸ்
தொ.பேசி / Tel : 0777492861
மின்னஞ்சல் / E-mail : croos_a@yahoo.com



**தொடர்பு முகவரி :**
திரு.த.கோபாலகிருஸ்ணன்
இல.19, மேல்மாடித்தெரு,
மட்டக்களப்பு, இலங்கை.

**Contact :**
**Mr.T.Gopalakrishnan**
19,Upstair Road,
Batticaloa, Sri Lanka.

தொலைபேசி / Telephone
065-2227876, 077-2602634

மின்னஞ்சல் / E-mail
senkathirgopal@gmail.com


ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.

**கவிதைகள்**


✶ காட்டில் எறிக்கும் கறுப்புநிலாப் பிஞ்சுகள் 21
✶ மறவாதீர் 23
✶ விளைச்சல் – 22 (குறுங்காவியம்) 27
✶ நாங்கள் 34
✶ ஊர் கூடித் தேரிழுத்தால் 41
✶ மரணிக்க வேண்டும் 52


**கட்டுரைகள்**


✶ நாணலை வருடும் அலைகள் 07
✶ வசீம் அக்ரமின் 'ஆக்கிரமிப்பின் கால்தடம்' இரசனைக் குறிப்பு 24
✶ 'திசேரா'வின் படைப்புலகும், படைப்புகளும் 29
✶ சொல்வளம் பெருக்குவோம்–13 42
✶ நீர் பற்றிய பண்பாட்டு வியாக்கியானம் : ஒரு மானுடவியல் நோக்கு 46
✶ புவியில் சுருங்கும் பசுமைப் போர்வை 60


**கதைகள்**


✶ "பயணங்கள் தொடர்கின்றன" (சிறுகதை) 13
✶ அலுப்பு (குறுங்கதை) 40
✶ செங்கமலம்–16 (தொடர்நாவல்) 55

✦ ஆசிரியர் பக்கம் 02
✦ அதிதிப்பக்கம் 03
✦ கதிர்முகம் 22
✦ கதை கூறும் குறள்-9 35
✦ தமிழியல் விருது - 2010 44
✦ பதிவு 53
✦ விளாசல் வீரக்குட்டி 63
✦ வானவில் 64

மே தினம்! உலகளாவிய ரீதியில் தொழிலாளர்களுக்காகக் கொண்டாடப்படும் நாள். அன்று மட்டும் தொழிலாளர்கள் கனம் பண்ணப்பட்டு, மிகுதி நாட்களில் சக்கை பிழியப்படும் இன்றைய கைத்தொழில் மயமாக்கலின் நிலைமைகளில் தொழிலாளர்கள் சார்ந்த இலக்கியங்களை நினைத்துப்பார்க்க வேண்டியுள்ளது. கைத்தொழில் புரட்சியும் அதன் பின் தோன்றிய அவசர வாழ்க்கை முறையும் சமூகத்தில் இலக்கியத்தின் கன பரிமாற்றங்களில் பாரிய மாற்றங்களைத் தந்தது யாவரும் அறிந்ததே. நாவல்கள் அவரச வாழ்க்கைக்குப் பொருந்துமாறு சிறுகதையானதும், கவிதைகளின் பரிமாணங்கள் வெவ்வேறு வடிவோடு விடயங்களைக் கொண்டதாகவும் காணப்பட்டதும் நமக்குத் தெரியும். மாக்சிச இலக்கியங்களில் காணப்பட்ட விடயதானங்கள் தொழிலாளர்களை மையக் கருத்தாகக் கொண்டதும் நமக்குத் தெரியும். ஆயின் இன்று நாம் தொழிலாளர்களை சமூக மாந்தர்களாகப் பொதுமைப்படுத்திக் காண்பதாலோ என்னவோ விசேடமான இலக்கியச் சட்டகங்களுக்குள் தொழிலாளர்களைச் செருகிப் பார்ப்பதில்லை. ஆயின், அது முறையல்ல என்பதையே **'செங்கதிர்'** சொல்ல முனைகின்றது. தற்கால இலக்கியங்களில் தொழிலாளர்கள் தனித்துவமாகவும், விசேடத்துவமாகவும் கருத்திலெடுத்து இலக்கியக் கருப்பொருளாக்கப்படவேண்டியவர்களாவர். அவ்வாறே தொழிலாளர்களால் ஆக்கப்படும் இலக்கியங்கள் தனித்துவமாகக் கணிக்கப்பட வேண்டியவை.


"....தொழில் பெருகுது... தொழிலாளி வாழ்வான்..." எனப் பாரதி பாடினார். அவரது பார்வையில் தொழிலாளர்களின் அவலம் புரிகின்றது. நாமும் தினம்தினம் சந்திக்கும் தொழிலாளர்களின் அவலங்களைப் புரிந்துகொள்ள முயல்கின்றோமா? இந்தக் கேள்விக்கு விடை எதுவானாலும் நாம் தொழிலாளர்களாக வாழ்வதும், தொழிலாளர்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் எமக்கு மறந்துபோகிற விடயமாகின்றது.

ஆயின், இன்னும் நாம் இந்த சடத்துவ வாழ்க்கை வாழ முடியாது. தொழிலாளர்களின் இலக்கியங்களைக் கனம் பண்ணும் பக்குவம் நமக்குள் வரவேண்டும். தொழிலாளர்களின் வாழ்க்கையின் மறுபுறத்தே உள்ள மிகக் கொடூரமான விடயங்களையும், மிக முக்கியமான விடயங்களையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்கு தொழிலாளர்களுக்கான இலக்கிய வகையொன்றை கண்டெடுக்க வேண்டும் என எழுத்தாளர்களை 'செங்கதிர்' வேண்டி நிற்கின்றது.

■ **அன்பழகன் குரூஸ்**
துணை ஆசிரியர்



# அதிதிப் பக்கம்



**'செங்கதிர்'** இதழின் இம்மாத அதிதி
**2008 இல் பவளவிழாக் கண்ட இலங்கையின் மூத்த படைப்பாளி, இலக்கிய வித்தகர்**
## அநு.வை.நாகராஜன்
அவர்களாவார்.

✦ அநு.வை நாகராஜன் அவர்கள் 25.05.1933 இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமாராட்சியைச் சேர்ந்த உடுப்பிட்டியில் பிறந்தார். தந்தை - வைரமுத்து, தாய் - இராசம்மா. இவரது தந்தையார் வைரமுத்துவுக்கு அநுராதபுரத்தில் சொத்துக்கள் இருந்தமையால் இவரது இளமைக்காலம் முழுவதும் அநுராதபுரத்திலேயே வாழ நேர்ந்தது. அதனால்தான் தனது புனைபெயரை அநு.வை. நாகராஜன் ஆக்கிக்கொண்டார். ஆரம்பக் கல்வியை அநுராதபுரம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் ஆரம்பித்தார். அங்கு தரம் 3 வரை பயின்றபின் அநுராதபுரம் சென்ற் யோசப் கல்லூரியில் சேர்ந்து ஆங்கில மொழிமூலம் எஸ்.எஸ்.சி வரை கற்றார். எஸ்.எஸ்.சி பரீட்சையில் தமிழ், புவியியல், குடியியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் தேறினார். அநுராதபுரத்தில் சுகாதாரத் திணைக்களம், புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றில் தற்காலிகமாக எழுதுவினைஞராக மூன்று ஆண்டுகள் பணியாற்றியபின் மேற்படிப்பிற்காக இந்தியாவின் தமிழ்நாட்டிற்குச் சென்றார். அங்கு மாத்தாண்டம் என்னும் இடத்தில் அமைந்துள்ள YMCA கல்லூரியில் **'சமூகசேவையும் நலனோம்புதலும்'** என்ற துறையில் (1955/56) பயின்று டிப்ளோமாப் பட்டம் பெற்று நாடு திரும்பினார். நாடுதிரும்பிய பின் அநுராதபுரம் விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்துகொண்டார். பின்னர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். லண்டன் பல்கலைக்கழக இடைநிலைப்பட்டமும் பெற்றார். 1971 இல் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுப் பணியாற்றும்போது ஆசிரிய விஷேட பதவித்தரம் - 2 ஐப் பெற்றார். பின்னர் கொழும்பு றோயல் கல்லூரிக்கு மாற்றம் கிடைத்து அங்கு பணியாற்றும் போது அதிபர் சேவை தரம் - 5 கிடைத்த காரணத்தால் மன்னம்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு உப அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றார். அங்கிருந்து தெகிவளை மெதடிஸ்த தமிழ் வித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் பெற்றார். இப்பாடசாலையின் பெயர் பின்னர் தெகிவளை தமிழ் வித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற இவரே உந்துசக்தியாக விளங்கினார்.

கொழும்பில் பணியாற்றிய காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டமாணி முதல் நிலைத் தேர்விலும் சித்தியடைந்தார். அத்துடன் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் பொறுப்பான பதவி வகித்தார்.

1978ல் மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்று நீண்டகால இடைவெளியின் பின் தன் சொந்த மண்ணான யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வந்தார். 1987 இல் தாவடி இ.த.க. பாடசாலைக்கு முதலாம்தர அதிபராக பதவியுயர்வுடன் வந்தார். சென்னை சைவ சமயத்தின் சைவப்புலவர் பட்டத்தேர்விலும் சித்தியடைந்தார். 1994 இல் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை (SLEAS) தரம் - 5இல் உள்வாங்கப்பட்டு கிளிநொச்சி கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பணி புரிந்தார். 1994 இல் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு வலதுபக்கம் செயலிழந்து போனதால் அவ்வருடமே அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். வலது கை ஓய்ந்தபோது இடதுகையாலே எழுதிச் சாதனை படைத்தவர் அநு.வை.நாகராஜன் அவர்கள்.

- இவரது எழுத்துத்துறைசார் பணி இவரது பதினைந்தாவது வயதில் ஆரம்பமாகிற்று. தமிழ்நாட்டின் சிறுவர் சஞ்சிகைகளில் எழுதத் தொடங்கி சிறுகதை, கவிதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் தடம் பதித்தார். **'அன்னை'** என்ற முத்திங்கள் இலக்கிய ஏட்டை அதன் ஆசிரியராகவிருந்து 1959/63 காலப்பகுதியில் நடத்தினார். 1960களில் வீரகேசரி இதழில் **'மாணவர் நல்லுரைக்கோவை', 'தென்குடிமாந்தர்'** எனும் தலைப் புகளில் பல மாதங்கள் தொடர் கட்டுரைகள் எழுதினார். 2005-2007 காலப் பகுதியில் **'வீஜே'** என்ற சிறுவர் சஞ்சிகையில் **'அறிவியல் உலகம்'** எனும் தொடர் கட்டுரை எழுதினார். வீரகேசரி, தினபதி, ஈழநாடு, *Observer* பத்திரிகைகளில் நிருபராகவும் புகைப்பட நிருபராகவும் இருந்ததோடு வானொலியில் நீண்ட காலம் இலக்கிய சமூக, சமயப் பேச்சாளராக விளங்கியவர்.

- **இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் :**
  - ☆ **'மார்கழி மங்கையர்'** (1971)
  - ☆ **'மாணவர் நல்லுரைக்கோவை'** (1976) – 1964இல் வீரகேசரி நாளிதழில் **'மாணவர் கேசரி'** எனும் பகுதியில் வெளியான கட்டுரைகளை உள்ளடக்கியது.
  - ☆ **'தாய் தரும் தாலாட்டு'** (1988)
  - ☆ **'காட்டில் ஒரு வாரம்'** (1988) – சிறுவர் இலக்கியம். இந்நூலுக்காக சாகித்திய விருதும், **'இலக்கிய வித்தகர்'** பட்டமும் கிடைத்தன.
  - ☆ **'அவன் பெரியவன்'** (சிறுவர்களுக்கான கதை) – 1993
  - ☆ **'விநாயகர் திருவருள் சிறுவர் சிந்தனைக் கதைகள்'** – (1992)



  - ☆ **'தேடலும் பதித்தலும்'** – (1992) அறிவியல் மேதைகளின் வரலாறு கூறும் நூல்
  - ☆ **'பட்டரின் அபிராமி மான்மியம்'** – (2000) கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பமைப்பினைக் கொண்ட அபிராமி அந்தாதி எனும் நூலின் விரிவுரை நூல். வடக்குக் கிழக்கு மாகாண அரசின் சிறந்த நூலுக்குரிய விருதையும் பணப்பரிசையும் பெற்றது.
  - ☆ **'சிறுவர் சிந்தனைக் கதைகள்'** (2002) – குழந்தை உள்ளங்களைக் கவரக்கூடிய பதினான்கு கதைகளைக் கொண்டது.
  - ☆ **'ஒரு காலத்துச் சிறுகதைகள்'** (2003) – 1955 இலிருந்து 1985 வரையிலான காலப் பகுதியில் எழுதப்பட்ட பதினொரு கதைகளை உள்ளடக்கியது.
  - ☆ **'அநு.வை. நா இன் கருத்தும் எழுத்தும்'** (2004) – பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதி அவ்வப்போது வார இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. பல்வகைக் கல்வி நெறிகளுள் பத்து வகைக்குள் அடங்கும் முப்பத்தொரு கட்டுரைகளைத் தாங்கியது.
  - ☆ **'அறிவியற் பேழையில் ஒரு சிலமணிகள்'** (2005) – வானொலி ஒலிபரப்புக்களைத் தொகுத்து வெளியிடப்பட்டதொரு நூல்
  - ☆ **'சிறுவர் கவிதையிற் புதிய சிந்தனைகள்'** (2005)
  - ☆ **'சிறுவரும் அவர்தம் அறிவுசார் சாதனங்களும்'** (2005)
  - ☆ **'சிறுவர்க்கான பழமொழிக் கதைகள்'** (2005)

- 'தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்' எனும் அமைப்பின் நிறுவுனர்களில் ஒருவர். ஆரம்பகாலத்திலிருந்து பல ஆண்டுகள் அதன் பொருளாளராயிருந்து தற்போது அதன் ஆலோசகராயிருந்து உதவுகிறார்.
- யாழ்ப்பாணத்தில் செவிடர் குருடர் பாடசாலை ஆரம்பித்த காலம் முதல் அதனை அரசு பொறுப்பேற்கும்வரை அதன் சபை உறுப்பினராகப் பணியாற்றியவர்.
- தெல்லிப்பழையில் ஆரம்பித்து இப்போது சுன்னாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற வாழ்வகத்தில் (விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்) 1984-1994 காலத்தில் பொதுச் செயலாளராகச் செயற்பட்டவர்.
- யாழ் வலிகாமம் வடக்குப் பிரஜைகள் சங்க நிர்வாக சபை உறுப்பினராகவும், பொருளாளராகவும் பலகாலம் பணிபுரிந்தவர்.
- அநுராதபுரம் விவேகானந்த சபையின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்தவர்.
- அநுராதபுரம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொதுச்செயலாளராக 1968 முதல் 1973 வரை தொண்டாற்றியவர்.
- சேவையாற்றிய பாடசாலைகளிலெல்லாம் சாரணியத்தோடு ஒன்றுபட்டுப் பணியாற்றியவர். முதலுதவிக் குழுக்களுக்குப் பொறுப்பாக இருந்துள்ளார்.

✦ சத்தியசாயி மனித விழுமியக் கல்வித் திட்டத்தில் குழு உறுப்பினராகக் கடமையாற்றியுள்ளார்.

✦ தென்மயிலை புனர்வாழ்வுச் சபைச் செயலாளராக 1988 வரை செயற் பட்டவர்.

✦ அகில இலங்கை கண்ணதாசன் நினைவுப் பணிமன்றம் 2006 இல் இவருக்கு **'இலக்கிய வேந்தர்'** என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

✦ 2007 இல் நடைபெற்ற அகில இலங்கை கம்பன் விழாவில் மூத்த எழுத்தாளர் விருதும் கௌரவமும் பெற்றார்

✦ அநுராதபுரம் விவேகானந்த வித்தியாலத்தின் வைரவிழாவின் போது கௌரவிக்கப்பட்டார்.

✦ 23.08.1971 இல் தெல்லிப்பழை கட்டுவன் திரு நாகலிங்கம் விதானையா ரின் மூன்றாவது புதல்வி நேசபூபதி அவர்களை நாகராஜன் அவர்கள் மணம் புரிந்தார். மனைவி சங்கீத ஆசிரியை. இந்தியாவின் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். ஆரம்பத்தில் தனியார் நிறுவனங்களிலும் பின்னர் கொழும்பு சென்.பிறிஸ்டேஸ் கல்லூரி, காங்கேசன்துறை மகா வித்தியாலயம், கட்டுவன் ஞானோதய வித்தியா லயம், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் புகழ்பூத்த சங்கீத ஆசிரியராகப் பணி யாற்றி இறுதியாக 1997முதல் 2002 வரை கொழும்பில் வெள்ளவத்தை இராமக்கிருஷ்ண வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றார். இவர்களது ஏக புத்திரன் சிவானுஜன் விஸ்டம் நிறுவனத்தின் பங்கா ளியாகத் தொழில்புரிகின்றார்.

✦ பரந்து விரிந்த சமூக ஈடுபாட்டுடன் சமூகத்தோடு நெருங்கிச் செயற்பட்ட ஓர் கலை இலக்கியவாதி - எழுத்தாளரான **அநு.வை.நாகராஜன்** அவர்கள் பவளவிழாக்கண்ட இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். சிறுவர் இலக்கியத்திற்கான இவரது பங்களிப்பு சிலாகிக்கத்தக்கது. தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தினூடாக இவர் ஆற்றிய கலை இலக்கியச் செயற்பாடுகள் கனதியானவை.

இத்தகைய இலக்கிய ஆளுமைகொண்ட இலங்கையின் மூத்த எழுத்தா ளர் அநு.வை.நாகராஜன் அவர்களை **'செங்கதிர்'** இன் இம்மாத அதிதியாக அறியத்தருவதில் செங்கதிர் மகிழ்ச்சியும், பெருமையுமடைகிறது. ■



# நாணலை வருடும் அலைகள்

**— அநு.வை.நாகராஜன் —**

**பி**றப்பதற்கு ஓர் ஊர்; வாழ்வதற்குப் பிறிதோர் ஊர். என்னைப் பொறுத்தமட்டில், இது மிகவும் பொருத்தமாக இருந்தது.

**அநுராதபுரம் :**

நான் நீண்டகாலமாக வாழ்ந்த ஊர். இன்றைய தமிழருக்கு அவ் வூர் ஒரு 'சிம்ம சொப்பனம்'. ஆனால் ஒரு காலத்தில் அது ஒரு 'குட்டி யாழ்ப்பாணம்'. அந்நாளில் இங்கு வாழ்ந்த தமிழரின் வாழ்வும் வளமும் இன்று பழங்கதைகளாகிவிட்டன. இருப்பினும் என் போன்றோரின் நெஞ் சிருக்கும் வரை அவை நீங்கா நினைவுகளே! என் நினைவுகள் நாளைய தலைமுறைக்கு ஒரு பதிவாகும் என்ற நோக்கில் இங்கு சில பதிவுகளைத் தர முயல்கிறேன்.

வன்னி எல்லையில் இருக்கும் அநுராதபுரம் முன்னொரு காலத் தில் ஓர் இராசதானியாகவும் - இராஜரட்டையின் தலைநகராகவும் விளங்கியது. தென்னிந்தியப் படையெடுப்பால் இந்நகர மக்கள், தென் திசைக்குப் புலம் பெயர்ந்தனர். அதனால், அதன் நீர் வளமும், நில வளமும் தூர்ந்தன. நாடு காடாயிற்று. இது முடிமன்னர் காலத்துக்குப் பின்வந்த வரலாறு.

கால மாற்றத்தில், ஐரோப்பியர் வருகையின் பின் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சியின்போது வளங்குன்றி வரண்டு கிடந்த வன்னிப் பிரதேசம், புனருத்தாரணம் பெற முன்னுரிமை பெற்றது. அதன் பயனாகத் தூர்ந்த குளங்களும் நீரணைகளும் மீளமைப்புப் பெற்றன. காடுகள் அழிக்கப்பெற்றன. பயனுறு கழனிகளுடன் மக்கள் குடியமர்வுகளும் தோற்றுவிக்கப்பெற்றன. அதே வேளையில், இம் மண்ணில் மறைந்தி ருந்த தொல்கலை, கலாசாரச் சின்னங்கள் அகழ்ந்து ஆராயவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இப்பணிக்கு, திரு.பெல் எனும் ஆங்கிலத் துரை மகனார் தொல்பொருள் ஆய்வுத் திணைக்கள அதிகாரியாக வந்து, அநுராதபுர நகரையும் அதன் சூழலையுந் தன் ஆய்வுகளுக்கு உட்படுத் திக் கொண்டார். இவ்வேலைகளுக்குக் கூலியாள்கள் தேவைப்பட்டனர். அதற்காக மலேரியா நுளம்பு மண்டிய அக்காலகட்டத்தில் - வன்னிக்

கிராமத்துச் சிங்களவரும், வடக்குக் கிழக்கு மாகாணத்துத் தமிழரும் இங்கு வந்தேறு குடிகளாயினர். தமிழரைப் பொறுத்தமட்டில் குறிப்பாக வடமாராட்சித் தமிழர் தமது வியாபார நோக்கிலேயே இங்கு வந்திருந் தனர். கால கதியில் இவர்களே இந்நகரின் சொத்து சுகம் உள்ளவர்களாக மாறினர். 'பழைய நகர்' என இப்பொழுது அழைக்கப்பெறும் அநு ராதபுரத்துப் பழைய நகர்ப்பிரதேசம் ஒரு காலத்தில் 'குட்டி வடமாராட்சி' எனப் பெருமைபெற்றிருந்தது. அந்நாளில், இங்கு குடியேறிய தமிழர் சிங்கள மக்களோடும் ஏனைய இனங்களோடும் இணைந்து வாழ்ந்தனர்.

ஆயினும், தமக்கே உரித்தான கலை - கலாசாரப் பின்னணியை நழுவ விடாதும் கல்வி கேள்விகளை நழுவ விடாதும் தனித்துவமாக வாழ்ந்தனர்.

இந்நாளில், இலங்கை முழுவதும் ஆங்கில மொழியே அரச கரும மொழியாகவும், கல்வியில் முதல் மொழியாகவும் இருந்தது. சிங்களக் கிராமங்களில் 'பிவினா'க்களும் (பௌத்த மதபீடங்கள்) அரச ஆரம்ப (தமிழ், சிங்கள) பாடசாலைகளும், ஒன்றிரண்டு ஆங்காங்கே இருந்த போதிலும் ஆங்கில உயர் கல்லூரிகளோ, பாடசாலைகளோ அக்கிராமங்களில் இருக்கவில்லை. அநுராதபுர நகரில் மட்டும் உறோமன் கத்தோலிக்க மத பீடத்தின் கல்வி நிறுவனங்களான புனித வளனார் (St.Joseph's College) கல்லூரிளும் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை யும் (Holy Family Convent) இருந்தன. இக் கல்வி நிறுவனங்களில் தனித் தனியாக தமிழ், சிங்கள ஆரம்பக் கல்வியோடு உயர் இடைநிலை வகுப் பின் ஆங்கிலக் (Secondary Education) கல்வியும் போதிக்கப் பெற்றது. இக்கல்வி வாய்ப்பும் அன்றைய பண வசதி உள்ளோருக்கும் அரசமதச் செல்வாக்கு உடையோருக்கு மட்டுமே கிடைத்து வந்தது. மேலும், வட மத்திய மாகாணம் முழுவதுக்குமாக இருந்த இக் கத்தோலிக்க மதக் கல்வி நிறுவனங்கள் மன்னார், வவுனியா போன்ற ஏனைய வன்னி நகர்ப் பிள்ளைகளுக்கும் உதவின. இந்நிலை, இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் வரும்வரை நீடித்தது.

இலங்கையின் சுதந்திர நாளை (1948) அடுத்து வந்த தேசிய அரசாங்கங்கள் வன்னிக் கிராமங்களில் ஏராளமான வித்தியாலயங்களை யும் மகா வித்தியாலயங்களையும் அமைத்தன. அத்தோடு அநுராதபுரத் தின் சிங்கள - பௌத்த புனிதத்தைப் பேணும் பொருட்டு 'புனித நகர்த் திட்டம்' ஒன்றினையும் அவை கொண்டு வந்தன. இத்திட்டத்தின் பிதாமகன், காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆவார்.



இத்திட்டத்திற்காக இடைக் காலத்தில் பழைய நகராக விளங்கிய அநுராதபுர நகர் புதியதோர் இடத்துக்கு 'புதிய நகர்' என்ற மகுடத்தோடு, 1956ல் புலம் பெயர்ந்தது.

இப்புதிய புலப்பெயர்வு, இடைக்காலப் பழங்குடிகளான தமிழர் வாழ்வில், பொருள் வளத்திலும் சமூக வளத்திலும் ஒரு பாரிய திருப்பு முனையாக விளங்கியது. இவர்களது சொந்த நிலங்கள், வயல்கள், தோட்டங்கள், கடைகள், சாலைகள் என்பன மாற்றீடு செய்வதாகக் கூறிச் சுவீகரிக்கப்பட்டன. இவற்றோடு இவர்களது ஒரேயொரு பாடசாலையாக இருந்த விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம், ஸ்ரீ கதிரேசன் ஆல யம், விவேகானந்த சபை, இஸ்லாமிய மசூதி போன்றவையும் புதிய நகருக்குப் புலம் பெயர்க்கப் பெற்றன. மேலும், பழைய நகரில் கொடி கட்டி நின்ற மாவடி, சிற்றம்பலம் வீதி, ஒட்டுப்பள்ளம், நாலேக்கர், ஐந் தேக்கர், குருநாகல் வீதி போன்ற தமிழர் வாழ் குடியமர்வுகள் யாவும் சிதைக்கப்பட்டன. அத்தோடு, நகராட்சி மன்றம் போன்றவற்றில் பேருறுப் புரிமை பெற்று மேலாண்மை செய்த இவர்களது முதன்மையும் ஒழிக்கப் பட்டது. இவையனைத்துக்கும் உறுதுணையாக 1958ஆண்டு இனக் கலவரமும் பெருமளவில் உதவியது. இதனையடுத்து, 1965ம் ஆண்டு வரை நிகழ்ந்த புதிய நகர் திட்டத்தின் கீழ் 'கஞ்சிக்குப் பயறு போட்டது' போல் தமிழர் குடியமர்வுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிங்களக் குடிகளுக்குள் இடம் பெற்றன. இவையும் 1977ம் ஆண்டு பேரினவாத இனக் கலவரத்தில் சிதைந்தன. எஞ்சியிருந்தவையும் 1984ல் முற்றாகச் சிதைக்கப்பட்டன.

இங்கு, இன்று தமிழ்பேசும் முஸ்லிம்கள் தவிர்ந்த தமிழரோ அவர்தம் குடிமனைகளோ, கோயில்களோ, கல்விச்சாலைகளோ, சமூக நிறுவனங்களோ இல்லை. பல்லாண்டு காலமாக தேசிய இனங்களில் ஒன்றெனெ வாழ்ந்த தமிழரின் வாழ்வும் வளமும் இன்று அங்கில்லை. அவர்களின் எச்சங்கள்தாம் இன்று, அங்கு அழிந்த சின்னங்களாகி நிற்கின்றன. இங்கு ஒரு காலத்தில் மேலாண்மையுடன் வாழ்ந்த தமிழரின் சமூக - பொருளாதார - அரசியல் மேன்மைகள் இவ்வாறு இருக்க - இதே காலத்தில் இவர்கள் ஈடுபாடு கொண்ட கலை இலக்கிய கலாசார முயற்சிகள் எவ்வாறு இருந்தன என்பதையும் இனி இங்கு நினைவு கூர்வது நல்லது.

1950களுக்கு முன்பு, இங்கு வாழ்ந்த தமிழரின் கலை இலக்கிய முயற்சிகள் எதுவும் தெளிவாயில்லை. அந்நாளில், யாழ்ப்பாணத்திலி

ருந்து கோயில் திருவிழாக்களின்போது இங்கு இறக்குமதி செய்யப்பட்ட மேளக் கச்சேரிகள், சதிர்க்கச்சேரிகள், சப்பறக் காட்சிகள், அலங்காரச் சிகர வளைவுகள் தவிர வேறு தமிழ்க்கலைகளை இவர்கள் காணவும் இல்லை - படைக்கவும் இல்லை. இலக்கிய முயற்சியில் தானும், எதனையும் இங்கு நினைவில் வைக்கக் கூடியதாயில்லை. பழைய கதிரேசன் ஆலய முருகன் மீது பாடிய ஓர் ஊஞ்சற்பா நூல், பருத்தித் துறைப் பண்டிதர் ஒருவரால் பாடப்பெற்றிருக்கிறது. அதேபோல், இஸ்லாமியருக்கும் ஒரு வரகவியாக இருந்த மீரா சாகிபுப் புலவர் என்பவர் இஸ்லாமிய நூல்களான **'விதி அறிவு விளக்கம்'**, **'சிக்கந்தர் மகத்துவக் கும்மி'** என்பவற்றை 1930களில் எழுதி வெளியிட்டு இருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நகருக்குச் சென்று தாயகம் திரும்பும் வழியில், கொழும்புக்கும் வந்து சென்றார். அவ்வேளையில் ஈழத்திலும் இந்துமத அருட்டுணர்வு மேலோங்கி இருந்தது. அவர் நினைவாக அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்கள் சிலர், அநுராதபுரம் விவேகானந்த சபை எனும் ஒரு சபையைத் தோற்றுவித்தார்கள். இச்சபை இந்துமதப் பணியோடு தமிழ்க் கல்விப் பணியையும் செய்ய முனைந்து, **'விவேகானந்த வித்தியாலயம்'** என்ற ஒரு தமிழ்ப் பாடசாலையையும் தொடக்கியது. சபையின் சிறிதுகால முகாமைத்துவத்தின் பின், இப் பாடசாலை அரசாங்க உதவி பாடசாலையாகி, 1966ஆம் ஆண்டளவில் அரசவுடைமையாயிற்று. இச்சபை குறிப்பாக - வித்தியாலயம் மூலம் தமிழ்க் கல்வியையும் சபை மூலம் தமிழ்ப் பெருவிழாக்கள், சொற்பொழிவுகள், கலை இலக்கிய நிகழ்வுகள் என்பனவற்றையும் அவ்வப்போது செய்தது. இக்காலத்திலேயே (1951ல்) அ/புனிதவளனார் கல்லூரி (St.Joseph's College) யின் மேல் வகுப்புத் தமிழ் மாணவர்கள் சிலர், பாடசாலைக்கு வெளியே தமிழ் மன்றம் ஒன்றினை அமைத்து சமய வேறுபாடின்றி தமிழ்க்கலை முயற்சிகளில் ஈடுபட்டனர். இம்மன்றம் பாடசாலை மாணவர்களால் தோற்றுவிக்கப் பெற்றபோதிலும் நாளடைவில் அதன் முழுப் பொறுப்புக்களையும் வெளியில் பல்துறை சார்ந்த இளைஞர்களும் முதியவர்களும் ஏற்று, **'அநுராதபுரம் தமிழ்க் கழகம்'** என்ற பெயரில் தமிழின் இயல் - இசை - நாடகம் - சமூகத் துறைகளில் பணிகள் பல புரிந்தனர். இக் கழகமே, இலங்கைத் தமிழ் மறைக் கழகம் (கொழும்பு), ஆண்டு தோறும் பல இடங்களில் நடத்தி வந்த 'திருக்குறள் மாநாடுகளில்', மூன்றாவது மாநாட்டை 1953ல் பொறுப்பேற்று, அநுராதபுரத்தில் வெகு சிறப்பாக நடத்தியது. 'சிலம்புச் செல்வர்' ம.பொ.சி. போன்ற தமிழ்ப் பேரறிஞர் பலர் இம்மாநாடு காரணமாக வந்து, சோழர் கால் பதித்த அநுராதபுர மண்ணை மணந்து சென்றனர். மேலும், இசைத் துறையில் - கருநாடக இசை வகுப்புக்களும்; நடனத்துறையில் நடன



வகுப்புக்களும்; நாடகத்துறையில் பல காத்திரமான நாடகங்களையும் இக்கழகம் அன்றைய ஆர்வலர்களுக்கும் சுவைஞர்களுக்கும் அளித்துப் பெருமைகொண்டது.

இக் கழகத்தின் தொடக்ககால உறுப்பினர்களுள் ஒருவராக இருந்ததோடு அதன் பொதுச் செயலாளராகவும் (1964 - 1971 வரை) இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது) இதேபோல், **அநுராதபுரம் வாலிபர் முன்னேற்றக் கழகம்** (1959ல்) என்ற ஓர் அமைப்பும் இந்நாளில் சமூக சேவைப் பணிகளோடு தமிழ்க் கலை, கலாசார, இலக்கியப் பணிகளையும் செய்து வந்தது. இக்கழகம் முத்திங்கள் மாசிகையான **'அன்னை'** எனும் சிற்றேடு ஒன்றினையும் வெளியிட்டு வந்தது. 'எல்லாந் தமிழ்', 'எல்லாந் தனித் தமிழ்' என்ற முனைப்பில் இயங்கிய இச்சிற்றேட்டில் அன்றைய பிரபல ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களும் எழுதினார்கள். இதில், பண்டிதர் கா.பொ.இரத்தினம், 'யாழ்ப்பாணம் தேவன்', மட்டு நகர், அருள் செல்வநாயகம், குன்றக்குடி அடிகளார் போன்றோர் தொடர்ந்து எழுதினார்கள். 'அன்னை'யின் முதன்மை ஆசிரியராகவும் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இதன் துணையாசிரியராக திரு.ஜோவலன் வாஸ் (தற்பொழுது தமிழக எழுத்தாளர்) இருந்தார். இச்சிற்றேடே நான் அறிந்தவரையில், அநுராதபுரத்தில் இருந்து அச்சில் வெளிவந்த முதற் கலை இலக்கிய சஞ்சிகை.

இதன் பின்னர், **'அநுராதபுரம் முற்போக்கு வாலிபர் சங்கம்'** என்றோர் அமைப்பும் இருந்தது. இச்சங்கம், **'இளைஞர் குரல்'** என்ற ஒரு சஞ்சிகையை வெளியிட்டது. இதழாசிரியர்களாக திருவாளர்கள் எம்.ஏ.சுல்தான், பீ.ஏ.சீ.ஆனந்தராசா என்போர் இருந்தனர். இவர்களுக்கு முன்னர் இங்கிருந்த ஜனாப் முகம்மது ஹனிபா (அன்புதாசன் - புதுக்கவிதையாளர், அன்பு ஜவகர்ஷாவின் தந்தை) திரு.க.மெய்யழகன் என்போரும் கவிதை, சிறுகதை, கட்டுரை என்பவற்றை எழுதினார்கள்.

இதனையடுத்து, 1960க்குப் பின் புனிதவளனார் கல்லூரி, விவேகானந்த மகா வித்தியாலயம் என்பவற்றிலிருந்த எழுத்தார்வங்கொண்ட ஆசிரியர்களின் வழி நடத்தல்களால் ஓர் இளைய கலை இலக்கியத் தலைமுறை, துடிப்போடு சில செயற்பாடுகளைச் செய்தது. இவர்தம் முனைப்பால் **'மாணவர் குரல்'**, **'புதுமை ஒலி'**, **'தமிழ்ச்சுடர்'**, **'கலைமதி'**, **வீரத் தமிழன்'**, **'பெட்டகம்'**, **'செங்கொடி'**, **'புத்தொளி'** போன்ற பல இதழ்கள் கையெழுத்துப் பிரதிகளாகவும், கல்லச்சுப் பிரதிகளாகவும் வெளிவந்தன. 1968ல் இங்கு, **'இளம் எழுத்தாளர் சங்கம்'** என்ற ஓர் அமைப்பும் உருவாகியது. அந்நாளில் தென்னிந்தியாவில் இருந்து தரமற்ற நூல்கள்,

சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்ற ஒரு குரல் இலங்கையில் எழுந்தது. இக்குரலின் முதல் ஒலி, பேரொலியாக அநுராதபுரத்தில் எழும்பியது. இதற்கான தீர்மானங்களை இச்சங்கம் நிறைவேற்றிப் பன்முனைகளிற் செயற்பட்டது.

அறுபதின் பிற்கூறில், ஆரம்பிக்கப் பெற்ற அ/சாகிரா மகா வித்தி யாலயத்து மாணவர்களின் **'இளந் தளிர்கள் இலக்கிய வட்டம்'**, **'பிறையொலி'** என்ற இலக்கியச் சஞ்சிகையைக் கல்லச்சில் வெளியிட்டது.

மேலே கூறிய அநுராதபுரம் தமிழ்க்கழகம், வாலிப முன்னேற்றக் கழகம், இளம் எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகளின் கலை - இலக்கிய - கலாசாரச் செயற்பாடுகள் வளங்குன்றி நின்றபோது **'அநுராத புரம் கலைச்சங்கம்'** என்ற ஒரு புதிய அமைப்பு இளந் தலைமுறையின ரால் 1972ல் தோற்றுவிக்கப் பெற்றது. இச்சங்கம், **'களம்'** என்ற சஞ்சி கையை 1982ல் வெளியிட்டதோடு, ஈழத்துப் புதுக் கவிதையாளர்கள் சிலரின் 44 படைப்புகளைப் **'பொறிகள்'** என்ற பெயரில், அன்பு ஜவகர் ஷாவைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு ஒரு நூலையும் வெளியிட்டது. இங்கு முன்பு வெளியாகி நின்றுபோன 'அன்னை'யின் பெயரில் இப் பொழுது ஜனாப், ஏ.எவ்.ரசீக் பரீட் ஒரு சஞ்சிகையை வெளியிடுகிறார்.

என் காலத்தில், திரு.ஜோவலன் வாசும் பத்திரிகைத் துறையோடு சில ஆக்கங்களையும் படைத்தார். எம்மையடுத்து, எனது மாணவர்களிற் பலர் எழுத்துத் துறையில் ஈடுபட்டனர். இந்த வகையில், இளந் தலை முறையின் இளங் குருத்துகளில் ஓரிரு காத்திரமான தளிர்கள் முகிழ்த் தன. அவர்களுள், இரா.வி.மூர்த்தி, இரா.நாகராசன், அன்பு ஜவகர்ஷா, சிவா.தம்பையா, பேனா.மனோகரன், ஆசி.ஞானம், ஹேமா மாலினி மெய் யழகன், க.குமாரசாமி என்போர் அவ்வப்போது துலங்கிய போதிலும் 'அன்பு ஜவகர்ஷா'வும் யானுமே இன்று எழுத்துத் துறையில் எமது சுவடுகளை ஆழமாகவும் அகலமாகவும், ஈழ எழுத்துலகிற் பதித்துக் கொண்டிருக்கின்றோம்.

கால நீரோட்டத்தில், அன்றைய அநுராதபுரத்துத் தமிழரின் வாழ்வும் வளமும் இன்று நீர்க்குமிழிகளாகிவிட்டன. ஆயினும் அவர்கள் பதிவின் நினைவலைகள் என்றும் ஓயா அலையென, அன்னார் ஊன்றிய நாணல்களை வருடிக்கொண்டிருக்கின்றன.

நாணல்கள் தாழும், நிமிரும்! ■

மல்லிகை (டிசம்பர் 1990) 229 இதழில் வெளிவந்து அநு.வை.நா வின் **'கருத்தும் எழுத்தும்'** நூலில் இடம்பெற்ற கட்டுரை.



சிறுகதை

# பயணங்கள் தொடர்கின்றன

சந்திரகாந்தா முருகானந்தன்



**அ**திகாலையிலேயே அதிரவைக்கும் ஷெல் வீச்சுச் சத்தம் தொடர்ச்சியாகக் கேட்கவே, திடுக்கிட்டுத் துயிலறுந்த மயூரன், அம்மாவின் முகத்தில் விழித்தான். கூடாரத்தை விட்டு வெளியே வந்து பார்த்தபோது, அதிகாலைப் பொழுது பனிப்புகார் போர்த்தியிருந்தது. மேலே இரைந்த சத்தம் கேட்டு பதற்றத்துடன் அண்ணார்ந்து பார்த்தான். வானத்துப் பறவைகள் போல் இரு புக்காரா விமானங்கள் கிழக்குப் புறமாகப் பறந்து கொண்டிருந்தன. 'ஆருக்கு இண்டைக்குக் கெடுகாலமோ? எங்கே கொண்டு போய் கொட்டப்போகுதோ?' என எண்ணிக்கொண்டிருந்தபோதே தொலைவில் குண்டுகள் விழுந்து வெடிக்கும் பாரிய சத்தம் கேட்டது.

கேட்டுக் கேட்டு சலித்து விரக்தியடைய வைத்துவிட்ட சத்தங்கள்! அவலமாய் குருதி பீச்சி தசை சிதறி அற்பமாய் பறிக்கப்பட்ட உயிர்கள்! வாழ்வே விரக்தியின் விளிம்புக்குச் சென்றுவிட்டதாலோ என்னவோ மயூரன் வெறும் நெடுமூச்சுடன் நிறுத்திக்கொண்டான்.

கூடாரம் அமைக்கப்பட்டு, பல குடும்பத்தவர்கள் தங்கியிருந்த அந்த வயற்பிரதேசத்திலிருந்து காலைக் கடன் களைக் கழிக்க காட்டுப்புறத்தையும் வாய்க்கால்கரையையுமே நாடவேண் டும். அவன் துரிதமாகக் காலைக்கடன் களை முடித்துக்கொண்டு தனது கூடா ரத்திற்குத் திரும்பிய போது, மைமல் பொழுது நீங்கி மெல்ல ஒளிக்கீற்றுக் கள் தரையைத் தழுவிக்கொண்டன. கூடாரத்துள் அம்மா உரைப்பையின்

மீது ஒடுங்கிக் கிடந்தபடி, கொய்து கொய்து இழுத்து இருமிக்கொண்டிருந்தாள். இடையிடையே சளி அடைத்துத் திணறினாள்.

பாதி கலைந்துபோய், கிழிந்த சேலையைப் போர்த்திக் கொண்டபடி, ஊசி ஊசியாய்க் குத்தும் கடும் குளிரில், ஒடுங்கிப் போய் படுத்திருந்த அம்மாவைப் பார்க்க அவனுக்கு அந்தரமாக இருந்தது. கவலையோடு அம்மாவைப் பார்த்தபடி கலைந்திருந்த சேலையால் அவளைப் போர்த்திவிட்டு தேநீருக்காக அடுப்பை மூட்டினான். ஈர விறகுகள் பற்றிக்கொள்ளாது அடம் பிடித்து புகைத்து கண்களை எரிய வைத்தது. இரவு குப்பி விளக்குக்கே எண்ணை இல்லாதபோது அடுப்பு மூட்ட இருக்குமா என்ன? அவனுக்கு தாகமாக இருந்தது. வாய்க்காலிலிருந்து மொண்டு வந்த தண்ணீரை கொதிக்க வைக்காமல் குடித்தால் அதோ கதிதான்.

ஒருவாறு அடுப்பைப் பற்ற வைத்தபின்னர், அம்மாவின் அருகே வந்து கவலையோடு அவளைப் பார்த்தான். கொடுநாச யுத்தம் ஏற்பட்டு ஏவுகணைகள் விரட்டி, இடப்பெயர்வுகள் அஞ்சலோட்டமாய்த் தொடர, ஊர்மாறி ஊராக அலைந்து அல்லல் பட்டு, அனைத்தையும் இழந்துவிட்ட இந்த ஒரு வருடத்தில் மனிதர்கள் தான் எவ்வளவு மாறிப்போய்விட்டார்கள். மரண பயத்துடன் கூடிய சோகம் அப்பிய முகங்கள், பசியாலும் பட்டினியாலும் ஒடுங்கிப்போய்விட்ட உடல்கள், நம்பிக்கையிழந்த அந்த முகங்களில் எஞ்சியிருக்கும் ஏதோ ஒரு நம்பிக்கை, ஒளிக்கீற்றுடன் வலம் வரும் வாழ்வு ஓட்டங்கள்!

அம்மாவுக்கு கூடவே முதுமையின் அரவணைப்பும், அறுபது வயதிலும் எழுபதைத்தாண்டிய தோற்றம்; எலும்புகள் முனைப்பாய்த் தள்ளிக் கொண்டிருக்கும் கன்னங்கள்; ஒட்டிய வயிறு; பொலிவற்று உலக்கைபோல் ஆகிவிட்ட கைகால்கள்; பார்த்துக் கொண்டிருக்கும்போதே மயூரனின் கண்கள் கசிந்து உருகின. கைகளால் தடவி தனது அன்பை வெளிப்படுத்தினான்.

அம்மாவிலே அவனுக்கு அலாதி பிரியம். அம்மாவுக்கு அவன் மீது அளவற்ற பாசம். செழித்துத் தழைத்த ஆலவிருட்சமாயிருந்த வாழ்வு. இலைகள் உதிர்ந்த படு மரமாய் போகும் என அவர்கள் நினைத்திருக்கவில்லை. மூன்று தசாப்தங்களைக் கடந்து விட்ட போர், இன்று நாலாம் கட்டமாய் தொடர்ந்து நரபலி எடுத்துக்கொண்டிருக்கிறது. வீடுவாசல்களை இழந்து, பொருள் பண்டங்களை இழந்து, உறவு சொந்தங்களைப் பறி கொடுத்து, அங்கே அவயவங்களை முடமாக்கி மூர்க்கமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் கொடூரத்தினிடையே காற்றிலடிபடும் சருகாகிப்போன மனித வாழ்வில் அவனும் அம்மாவும் விதி விலக்கல்ல. அற்ப ஆயுளிலேயே திடீரென்று பலியாகிப்போன அப்பா, ஷெல் வீச்சில் பலியான தங்கை, காரணமின்றிக் கைதாகி காணாமல் போய்விட்ட அண்ணா, போராளியாகப் போய்விட்ட தம்பி, புலம்பெயர்ந்து குடும்பத்துடன் போய் இப்போதும் பண மனுப்பும் அண்ணா, அக்காமார். எஞ்சியிருப்பது அவனும் அம்மாவும்தான்! குடும்பத்திற்காக பல தியாகங்களைச் செய்து ஓடாகிப்போன அம்மாவின் கடைசி காலத்தில், அவளை அன்பாகப் பார்த்தெடுக்க வேண்டும் என்ற அவனது ஆசை போரினாலும் இடப்பெயர்வினாலும் நிராசையாகப் போனதில் மயூரனுக்கு நெஞ்சைப் பிசைந்தது.



யுத்தமும் இடப்பெயர்வும் புலம்பெயர்வும் மாத்திரமன்றி இன்றைய இயந்திரமயப்பட்ட வாழ்வும், உறவுகளின் மகோன்னதங்களை மறந்துவிட்ட வாழ்வு முறையும் சமூகத்தில் முதியவர்களை தனிமைப்படுத்திவிட்டது. கூடு கலைந்து சிதறிப்போய் விட்ட மயூரனின் குடும்பத்தில் எஞ்சியிருப்பது துன்பமும் துயரமும்தான். அம்மாவுக்கு முதுமையில் ஆதாரமாக இருப்பது அவன் மட்டும்தான் என்பதால் மயூரன் தனது தனிப்பட்ட வாழ்வு பற்றி சிந்திக்கவில்லை. அம்மா, கடந்த சில வருடங்களாக எத்தனையோ தடவை வற்புறுத்தியும், அவன் திருமணம் செய்ய மறுத்துவிட்டான். தன்னையே கொண்டு செல்ல முடியாத மூஞ்சூறு விளக்குமாற்றையும் சுமக்க முடியுமா என்ற தயக்கம் ஒரு புறம், நிச்சயமற்றிருக்கும் மதிப்பிழந்த போர்க்கால வாழ்வில் அனாதைகளை உருவாக்கிவிடக்கூடாதே என்ற எச்சரிக்கை ஒரு புறம், எல்லாவற்றிற்கும் மேலாக அம்மாவை பார்த்தெடுக்க முடியாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் இன்னொரு புறமாக அவனது இளமைக் கால உணர்வுகளைக் கட்டுப்படுத்தின.

அம்மா முனங்கினாள். சொற்கள் தெளிவாக இல்லை. மயூரன் அம்மாவின் அருகே சென்று அமர்ந்தபடி "என்னம்மா? என்ன வேணும்? தேத்தண்ணி குடிக்கிறியளே?" என்று அன்போடு கேட்டான். அவனது வார்த்தைகளை அவள் கிரகித்துக்கொண்டிருக்க வேண்டும். எனினும் பதில் சொல்லமுடியாமல் சைகை மூலம் ஏதோ கூறினாள். குறிப்பறிந்த மயூரன் சளி துப்பும் சிரட்டையை எடுத்து அவள் சளியைத் துப்பிட உதவி புரிந்தான். அம்மாவின் கண்கள் பனித்திருந்தன. அவன் மெதுவாக அவளது கன்னத்தில் வடிந்தோடிய கண்ணீரைத் துடைத்தான். தன்னை அரவணைத்து கன்னங்களை வருடும் மகனின் பாசமான தேற்றுதலில் உருகிப் போய், அவள், அவனை அன்பான பார்வையால் தழுவினாள். அம்மா நீ எத்தனை ஆண்டுகள் எங்களை பார்த்தெடுத்திருப்பாய்! அதற்காக நான் இதைக் கூடச் செய்யக்கூடாதா? என்பது போல அன்பு ததும்ப அம்மாவை நோக்கிய மயூரனின் கண்களும் உருகித் துளிர்த்தன. இன்னும் எத்தனை இடப்பெயர்வுகள் காத்திருக்கின்றனவோ தெரியவில்லை. கொடிய ஆக்கிரமிப்பும் போரை நடாத்துபவர்கள் போருக்குள் சிக்கிச் சீரழியும் மக்கள் பற்றி துளியேனும் சிந்திக்கிறார்களில்லையே! தினமும் ஷெல் வீசினாலும், விமானக்குண்டு வீச்சுகளினாலும் பலியாகும் உயிர்களை பற்றிய செய்திகளை கசியவிடாமல் தீக்கோழி தலைவிரிப

மறைத்து மண்ணில் புதைத்தது போல் இருக்கிறார்கள் என எண்ணிக்கொண்டான். 'அம்மா, இனியும் இடப்பெயர்வு ஏற்பட்டால் தாக்குப் பிடிப்பாளா?' உடையார் கட்டிலிருந்து வள்ளிபுனத்திற்கு இடம்பெயர்ந்து வந்து, அடி எடுத்து வைக்க முடியாமல் தவித்தபோது, கடைசியில் சிறு தூரம் அவன் தானே தூக்கி வந்தான். நினைக்கும் போதே இந்துவின் நினைவு அவனது மனதை துவள வைத்தது.

கல்மடுவிலிருந்து உடையார் கட்டுப்பகுதியை நோக்கி நகர்ந்தபோது தான் இந்துவை முதன் முதலில் சந்தித்தான். வன்னேரிக்குளத்தில் பதுங்கு குழியுள் ஷெல் வீழ்ந்து அம்மா, அப்பா, சகோதரர்கள் பலியாகிப் போக மீதமாயிருந்த இந்து, இடப்பெயர்வின்போது அறிமுகமானவள். அம்மாவுடன் மீண்டும் இடம்பெயர்ந்தபோது, அவள் தான் அம்மாவுக்கு உறுதுணையாகக் கூடவந்தாள். உறங்கிப்போயிருந்த அவனது இளமை உணர்வுகளை அவளது அன்பு தட்டியெழுப்பத்தான் செய்தது. அம்மாவுக்கும் அவளைப் பிடித்துப்போய் விட அவனிடம் வாய் விட்டுக் கேட்டாள். "ராசா உனக்கும் முப்பது தாண்டியிட்டுது. இனியும் நீ தட்டிக்கழிக்கக் கூடாது. இந்த நல்ல பிள்ளை. பாவம் அனாதையாகிவிட்டாள்... நீ இனியும் மறுப்புச் சொல்லாமல் அவளைக் கட்ட வேணும்..."

"இல்லை அம்மா... இவ்வளவு கொடுமைகளுக்கு மத்தியில் நான் சுகம் அனுபவிக்க நினைக்கயில்லை. வேண்டாம் அம்மா..." மயூரனின் மனதிலும் விருப்பம் இருந்தாலும் மறுத்தான்.

"உப்பிடிச் சொல்லாதை மோனை.. சண்டை இப்ப இருபது முப்பது வருசமாக நடக்குது. அது முடியுறபாட்டையும் காணயில்லை. அதுக்காக நாங்கள் எதையும் ஒத்திப்போட முடியாது. எங்கடை இனம் அழிஞ்சிகொண்டு வருகுது. புதிதாகக் குழந்தை பிறக்காட்டில் எங்கட இனம் அழிஞ்சுபோகும் ராசா" அம்மா மன்றாட்டமாகக் கேட்கும்போது சம்மதித்து விடலாமா என்று அவனுக்கும் தோன்றியது. எனினும் மௌனமாக இருந்தான்.

"என்ன யோசிக்கிறாய் ராசா? இந்துவுக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு"

"இந்துவிடம் கேட்டனியளோ அம்மா?"

"கிழவியான எனக்குப் புரியிறது கூட உனக்குப் புரியேல்லையே ராசா. சொல்லித் தெரியுறதில்லை இதெல்லாம்..."

அன்றைய இடப்பெயர்வின் போது இரவு மரங்களின் கீழேயே தங்க நேரிட்டது. அவன் அம்மாவுடன் உரையாடிக்கொண்டிருந்த போது தொலைவில் இந்து இரவு உணவுக்காக பிடி அரிசியில் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவளை நோக்கி புன்னகைத்தபோது, அவளும் அவனை நோக்கிப் புன்னகைத்து, நாணத்துடன் பார்வையைத் தாழ்த்திக்கொண்டாள். அவனது மனதிலே பூந்தோட்டம்!



மூடைகளாக அடுக்கி வைத்திருந்த நெல் மணிகளைவிட்டு விட்டு, பச்சைப்பசேலென்று இருந்த நெல் வயல்களை விட்டுவிட்டு, இடம்பெயர்ந்து வந்து, அந்நியரின் நிவாரண அரிசியில் பாதிவயிற்றுக்கும் போதாத கஞ்சியைக் குடித்தபோது, மனதை என்னவோ செய்தது. அடுத்த வேளைக்கு இது கூட இல்லாதபோது மனம் தவியாய்த் தவித்தது. 'கடவுளே நாம் என்ன செய்தோம்?'

அன்று இரவு அமைதியாகக் கடந்தது. வானத்துப் பௌர்ணமி நிலா அவர்களது மனதிலும் வீசிக்கொண்டிருந்தது.

மயூரன் இந்துவின் அருகே சென்று, தயக்கத்துடன் அவளை நோக்கினான். அவள் அவனை அன்புடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

"இந்து........"

"ம்......" அவளுக்கு அவன் சொல்ல வருவது புரிந்தது.

"இந்து நான் உங்களை விரும்புகிறன்..."

மயூரன் முதன்முதலாக தன் மனக்கிடக்கையை இந்துவிடம் கூறியபோது, அதற்காகவே காத்திருந்தது போல அவளும் பொங்கிப் பூரித்தாள். சிறிது நேரம் ஏதோ ஏதோ எல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள். அம்மாவின் மனதும் நிறைந்து மலர்ந்திருந்தது.

சொற்ப நேர ஆனந்தத்தை எல்லாம் விரட்டி அடிப்பதுபோல முன்னேற முயலும் படையினரின் ஷெல்கள் அதிகாலையிலேயே அவர்களை விரட்ட ஆரம்பித்தது. அலறி அடித்துக் கொண்ட அனைவரும் மரங்களின் பின் பதுங்குவதும், எதிர்ப்புறமாக ஓடுவதுமாக அவலப்பட்டனர். மயூரன் ஒருபுறமும், இந்து மறுபுறமுமாக அம்மாவைத் தாங்கியபடி குன்றும் குழியுமான பாதைகளில் விரைந்தனர். அம்மாவால் ஈடுகொடுக்க முடியாதிருந்ததால் அவர்களது நகர்வு தாமதமானது. எனினும் ஷெல்கள் விரைந்து விரட்டிய வண்ணமே அருகருகே வந்து வீழ்ந்து வெடித்தன. காலனைத் தன்னுள் மறைத்து வைத்துக்கொண்டு வந்த ஷெல் ஒன்று அவர்களருகே வீழ்ந்து வெடித்துச் சிதறியபோது அதிலிருந்து வந்த சன்னமொன்று இந்துவின் நெஞ்சைத் துளைத்துப்போனது. அதுவே அவளது இறுதி மூச்சையும் காவிச் சென்றது, தாங்க முடியாத சோகத்துடன் மயூரன் அம்மாவோடு சேர்ந்து குளறி அழுதான். அவளது உடலைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கதறினான்.

அவளை அடக்கம் செய்யவும் முடியாமல், அடுத்தடுத்து வந்த ஷெல்கள் விரட்டின. அம்மாவால் ஒரு அடிதானும் எடுத்து வைக்க முடியவில்லை. அம்மாவைத் தூக்கி தோளில் சுமந்தபடி மயூரனும் இடம் பெயர்பவர்களுடன் விரைந்தான்.

வள்ளிபுனத்திற்கு வந்த பின்னரும் அம்மா இயல்பு நிலைக்கு வரவில்லை. இந்துவின் பிரிவை அவளால் தாங்க முடியவில்லை. எழுந்து

நடமாடவும் முடியாமல் நொடிந்து போனாள். எல்லா இடப்பெயர்வுகளின் போதும் தவறாமல் எடுத்துவரும் அம்மாவின் சிறிய பையும் உடையார் கட்டிலிருந்து வந்த இடப்பெயர்வின் போது தவறிவிட்டது. அவனுக்கும் அதில் கவலைதான் அந்தப் பையில் பணப்பெறுமதிமிக்க பொருட்கள் ஏதும் இல்லை. அம்மாவும் அப்பாவும் கலியாணத்தின் பின்னர் எடுத்துக்கொண்ட படமும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் எட்டுப்பேரும் சேர்ந்தெடுத்த படமும் மட்டும்தான்! அம்மா தனது வாழ்விலே எடுத்துக்கொண்ட படங்கள் அவை இரண்டும் தான். அப்பாவின் பிரிவுக்குப் பின்னர் எவ்வளவு வற்புறுத்தியும் அவள் படம் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டாள். எப்போதாவது அந்தப் படங்களை எடுத்துப் பார்த்து நெடுமூச்செறிவதை அவன் பார்த்திருக்கிறான். அப்பாவுடனான காதலையும், குடும்ப வாழ்வையும், பிரிந்துபோய்விட்ட பிள்ளைகளையும் நினைத்து வருந்துவாள். இம்முறை அதற்கும் இடமில்லாமற் போய்விட்டது. நேற்று திடீரென்று நினைவுக்கு வந்தவளாக, "ராசா.. என்ரை பை எங்கே மோனை?" என்று கேட்டாள். கையைப் பிசைந்துகொண்டு நிற்பதைத் தவிர, அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அம்மாவுக்கும் புரிந்திருக்க வேண்டும்... "ம்... உறவுகளே இல்லை எண்டபிறகு படம் இருந்தென்ன? இல்லாமல் என்ன?" என நெடுமூச்செறிந்தாள்.

தண்ணீர் கொதிக்கும் சத்தம் கேட்டு சுய நினைவுக்கு வந்த மயூரன், எழுந்து தேநீரைத் தயாரித்துக்கொண்டு அம்மாவின் அருகில் வந்து அமர்ந்தான். பனிபடர்ந்து புலரும் காலையில் அம்மாவின் தலை முடியைக் கோதியபடி முதுமையாய் உலர்ந்த அந்த முகத்தை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் அவனது கைகளை இறுகப் பற்றியபடி, அம்மாவும் நெகிழ்ந்துருகினாள். அவன் தேநீரை முடறு முடறாக அவளது வாயில் விட்டபோது, அவள் சிரமத்துடன் விழுங்கிக்கொண்டாள். சிறிது நேர மௌனம் இருவரிடையேயும் ஆக்கிரமித்துக்கொண்டது. சோர்ந்து இளகிப் போயிருந்த தனது தசையிழந்த விரல்களால் மறுபடியும் அவனது கைகளை இறுகப் பற்றியபடி "மோனை..." என்று சன்னமான குரலில் அவனை அழைத்தாள். அவளது கண்களில் பெருக ஆரம்பித்த கண்ணீர், அவனது குரலையும் தளதளக்க வைத்தது. "அம்மா" என்று அழைத்தவன் தொடர்ந்து பேச முடியாமல், முடங்கிக் கிடக்கும் அம்மாவை நோக்கினான்.

"ராசா... இனியும் இடம்பெயர வேண்டி வந்தால் என்னைப் பற்றி யோசிக்காதை மோனை. நீ ஓடித்தப்பு. வாழவேண்டிய வயது..." அம்மாவின் பாசமான வார்த்தைகளில் துடி துடித்த அவன், அவளது வாயை தன் விரல்களால் பொத்தினான். "உப்படி சொல்லாதையணை அம்மா... நான் தாங்க மாட்டன்... நீ இல்லாட்டில் பிறகு எனக்கு ஏன் இந்த வாழ்வு அம்மா?

"நீ உனக்காக வாழாவிட்டாலும் இந்த மண்ணுக்காக, மக்களுக்காக வாழலாம் தானே? ராசா. இதுவரை நான் உனக்கு சுமையாக இருந்தன். இனி இருக்கமாட்டன். அது எனக்கு விளங்குது"

"அம்மா... உப்படி சொல்லாதையணை. நீ நூறு வயதுவரை என்னோட வாழவேணும். வாழ்வாயம்மா..."

"நீ பெரிய பேராசைக்காரன் ராசா... இளசுகள் எல்லாம் அற்ப ஆயுளிலை சாகுதுகள்... குழந்தைகள், மாணவர்கள், பிள்ளைத்தாச்சியள் என பாகுபாடில்லாமல் வீணாகக் கொல்லப்படுகுதுகள்... எத்தனையோ அங்கவீனமாகி முடமாகுதுகள்... மருந்தில்லாமல் சாப்பாடில்லாமல் இன்னொரு புறம் சாகுதுகள்.. கடவுளுக்கும் கண் குருடாகிப்போச்சு..." இடையிடையே முட்டுப்பட்டாலும் உறுதியோடு கதைத்த அம்மாவை, ஆசுவாசப்படுத்திய படி நெஞ்சைத் தடவினான் மயூரன். வாழ்க்கையின் வலியின் கொடுமை அவளது நெஞ்சை உருக்குவது அவனுக்குப் புரிந்தது. சிறிது நேரத்தின் பின் மீண்டும் அவள் மௌனமானாள். எனினும் ஏறி இறங்கும் அவளது மார்பு உயிரிருப்பை உறுதி செய்தபோது அவன் மகிழ்ந்தான். மீண்டும் இருமல், உதடுகளின் ஓரத்தில் நுரைக்கும் சளி. அவன் சேலைத் தலைப்பால் அதை ஒத்தி எடுத்தபடி, "அம்மா என்னை விட்டுட்டுப் போயிடாதை" என கடவுளை நேர்ந்தான். கைகளின் சுருங்கிய தோல்களை நீவியபடி லயித்துப் போயிருந்த போது மீண்டும் அதிரும் ஷெல்கள் இத்திசை நோக்கி வரவே திடுக்கிட்டான்.

முடிவேயில்லாத வாரோட்டம்; மக்கள் தமது கைகளில் அகப்பட்டதைத் தூக்கிக் கொண்டு விரைந்தார்கள். குழந்தைகளும், சின்னஞ்சிறுசுகளும் வீறிட்டு அழுதுகொண்டிருந்தனர். அம்மா அசையாது படுத்திருந்தாள். அம்மாவை விட்டு விட்டு ஓட அவன் மனது இடம் தரவில்லை. அதிர்வில் கண்விழித்த அம்மா, "நீ ஓடித்தப்பு மோனை.. என்னைப் பார்க்காதை.." அவனிடம் ஈனஸ்வரத்தில் கெஞ்சினாள்.

ஷெல்கள் தொடர்ந்து வந்து வெடித்துச் சிதறி, மீண்டும் வீழ்ந்து வெடித்தன. எங்குமே மரண ஓலம். அவன் ஒரு சிறு பிள்ளையைப் போல அம்மாவைத் தூக்கி தன் தோளோடு அணைத்துக்கொண்டான். அவளைச் சுமந்தபடி கூட்டத்தோடு கூட்டமாக எதிர்த்திசையில் நடந்தான். அம்மாவின் வாயிலிருந்து வடிந்த சளி அவனது உடலை நனைத்தது. அடர்ந்த பாலை மரங்களினூடாக ஒற்றையடிப் பாதையில் விரைந்துகொண்டிருந்த போது, அம்மாவின் உடலில் மாற்றத்தை உணர்ந்தான். பலமான ஒரு முனகல் சத்தம், அடுத்தடுத்து சில நெடு மூச்சுக்கள் - இதற்குப் பின் அவள் அடங்கிப் போனதையுணர்ந்த அவனுக்கு ஏதோ புரிவது போலிருந்தது. அம்மாவைத் தரையில் நெடுங்கிடையாகக் கிடத்தி விட்டு, நாடி பிடித்து மார்பில் காது வைத்துக் கேட்டான். "ஐயோ அம்மா! என்னை விட்டுட்டுப் போட்டியேயணை" அவன் குளறி அழுதுகொண்டிருக்கும்போதே வானத்தில் விமானங்கள் வட்டமிட்டன.

மீண்டும் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு சிதறி ஓடினர். அருகே விழுந்து வெடித்துச் சிதறிய குண்டின் சன்னங்கள் சில உயிர்களைக் காவு கொண்டும், இன்னும் சிலரைக் காயப் படுத்தியும் சென்றன. தரையில் குப்புற படுத்து மீண்டும் நிமிர்ந்த மயூரனின் அருகில் குழந்தை ஒன்று வீறிட்டுக் கத்திக்கொண்டிருந்தது. அருகே இரத்த வெள்ளத்தில், அந்தக் குழந்தையின் தாயும், தந்தையும் துடிதுடித்து அடங்கிப் போவதை பார்த்தும், எதுவும் செய்ய முடியாமல் தவித்தான்.

மறுபடி அம்மாவின் பக்கம் திரும்பிப் பார்க்கிறான். எங்கிருந்து வந்தனவோ தெரியவில்லை. இரண்டு ஈக்கள், அம்மாவின் முகத்தில் அமர்ந்து பறந்து மறுபடியும் அமர்ந்தன.

“அம்மா.... அம்மா....” அவன் அலறி அழ, அதேவேளை அருகேயிருந்த குழந்தையும் “அம்மா.. அம்மா...” என்று அலறியது. எதையும் பார்க்க அவகாசமின்றி மக்கள் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தார்கள்.


அடக்கம் செய்யாத உடல்கள் பரவிக்கிடக்க, அது ஒரு மயான பூமியாகக் காட்சியளித்தது. மீண்டும் மீண்டும் அம்மாவின் உடலைத் தழுவி முத்தமிட்ட மயூரன், குழந்தையின் பக்கம் திரும்பினான். குழந்தையும் அவனைப் பார்த்து அழுகையை ஒரு கணம் நிறுத்திக் கொண்டது. மீண்டும் அது அழ ஆரம்பித்தது.

மெல்ல எழுந்து அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவனும் விரைகிறான். ஷெல்கள் மீண்டும் துரத்தி விரட்டிக்கொண்டிருந்தன.

அவனது பயணம் தொடருகிறது... ■

**மாமி :** யுத்தத்திலை பாதிக்கப்பட்டு அகதியாய் வந்திருக்கிறன் புள்ளை. உன்னையும் பாக்க எவ்வளவு ஆசையாய் இருந்தனான்.


**மருமகள் :** எனக்கும் உங்களைக் கண்டது எவ்வளவு சந்தோஷமாயிருக்குது மாமி. இண்டைக்கு நிண்டிட்டு நாளைக்கு ஆறுதலாய்ப் போங்கோ மாமி.



-தவா-



# காட்டில் எறிக்கும் கறுப்புநிலாப் பிஞ்சுகள்



கவலையின்றி நன்றாக
ஊனுண்டு பெருத்து
ஊர்ந்துசெல்லாப் பாம்பைப்போல
நெளிந்து நீண்டிருக்கும் - ஓர்
நெடுஞ்சாலை வழியே...,
சூரியன் சுட்டுச்சுட்டு
வெயிலில் காய்ந்துபோன
குயில்நிறத் தோலுமெலும்புமாய்
மொத்தமும் நனைந்து,
இருசக்கர வண்டியில்
இருபக்கமும் இழுத்துக்கட்டியிருக்கும்
விறகுத்தூக்கு நனையாமல் மூடி
விழுந்தெழும்பி மல்லுக்கட்டி - அதை
தெத்தித் தெத்தி மிதித்து
பறவை பழகும் மழையில்நனைந்த
காக்காய்க் குஞ்சுகளாய்
விறகு விற்கும்
குழந்தைத் தொழிலாளிகள்
குளிர் மார்கழிப் போதில் - என்னைக்
கடந்து போகையில் அவர்கள் பின்னே
நடந்து போகும் என்னையுமறியா - என்
சூச்சுமச் சுவடுகள்!
மலையும் மரமும்
மாநாடு போடக் கூடும்
காடெனும் இருள்மண்டபத்தே;
எறிக்கும் நிலா வெளிச்சத்தில்
பாதித் தூக்கத்தில் நடுநிசியிலெழுந்து
இரசிக்க மறுத்த வறுமைகளோடும்
இரசனைகளற்ற வனஜீவராசிகளோடும்
ஏட்டுக்கல்வி மறந்து - ஓர்
நாட்டுக்கவியைப் பாடியபடி
நாளைய பசிபோக்க - மீண்டும்
விறகு பொறுக்கி ஊரூராய் விற்கும்
காட்டில் எறிக்கும்
கறுப்பு நிலாப் பிஞ்சுகளாய் - ஏழைக்
குழந்தைத் தொழிலாளிகள்.

-ஆரையூர் தாமரை.

## கதிர்முகம்



உலகளாவிய ரீதியில் தமிழ் நூல்களின் விபரங்களை சேகரித்து 'நூல் தேட்டம்' எனும் தமிழ் நூலியல் தொகுப்புக்களைத் தொடராக வெளியிட்டு ஆவணப் படுத்திவரும் நூலகர் **திரு.என்.செல்வராஜா** (தற்போது லண்டனில் வசித்து வருபவர்) அவர்களுடன் மட்டக்களப்பின் முன்னணி எழுத்தாளர்களை சந்திக்கச் செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த 11. 04. 2010 அன்று மட்டக்களப்பு, கல்லடி - பாடுமீன் உணவகத்தில் தலைவர் அன்புழகன் குரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்திருந்தது.

இதுவரை ஒவ்வொன்றும் ஆயிரம் நூல்களின் விபரங்களைக் கொண்ட ஆறு தொகுதிகளை வெளியிட்டுள்ள இவரது ஏழாவது தொகுதிக்கு மேலும் நூல்களை அனுப்பி தமிழ் நூல்களின் ஆவணமாக்கத்தில் பங்குகொள்ளுமாறு திரு. என். செல்வராஜா அவர்கள் அழைக்கின்றார். நீங்களும் உங்களது அல்லது உங்கள் எழுத்தாள நண்பர்களது நூல்களின் விபரங்களை அனுப்பி வைக்கலாம்.

**நூல்களை அனுப்ப வேண்டிய**

**இலங்கை முகவரி :**
**Mr.V.T.Rajaram**
C 1/6, Veluvanarama Flats,
Off Homden Lane,
Wellawatta, Colombo - 06.

**லண்டன் முகவரி :**
**Mr.N.Selvarajah**
48, Hallvicks Road,
Luton
LV2, 9BH
UK.
Tel : 00441582703786



# மறவாதீர்!

வென்றோர்க்கு வாழ்த்துக்கள்!
வென்றோர்க்கு அடித்தளமாய்
நின்றோர்க்கும் வாழ்த்துக்கள்!
வென்றோரே, வென்றோர்க்கு
நின்றோரே செவிகொள்வீர்!
வென்ற மமதையிலே
வெறிகொண்டலையாதீர்!
தோல்விகண்டுழல்வோரின்
தோள்கடிக்கத் துணியாதீர்!
நெற்றி வியர்வை நிலம்
பற்றித் தெறிப்போரைப்
பற்றி நினைப்பதற்கும்,
பசுமையெழ வைப்பதற்கும்
வாக்குறுதிகளை நம்பி,
வாக்குகளைத் தந்தோரின்
போக்கு, நிலை மாற்றுதற்கும்
ஆக்கவழி தொடுக்கும்
நோக்கை இனி மறவாதீர்!
ஏற்றிவிட்ட ஏணிகளை
எட்டி உதைக்காதீர்!
ஏளனமாய் நினைக்காதீர்!
கரைசேர்த்த தோணிகளை
கடைசிவரை மறக்காதீர்!
இராப்பகலாய் உழைத்தோர்க்கு
இரண்டகங்கள் புரியாதீர்!
அணி பிரிந்து நின்றோரின்
அகம் கலங்க வையாதீர்!
பல்வேறு வகுப்பினரும்,
பல்வேறு தரத்தினரும்
பதறிவரும் வேளைகளில்
உதறிவிட நினையாதீர்!
'உயிர் அவர்கள்' மறவாதீர்!

-ஏறாவூர் தாஹிர்.



வஸீம் அக்ரமின்

# "ஆக்கிரமிப்பின் கால்தடம்"

## இரசனைக் குறிப்பு



- ஷர்மிலா ஷாருஸ்.

அநுராதபுரம் எல். வஸீம் அக்ரமின் **"ஆக்கிரமிப்பின் கால் தடம்"** படிகள் பதிப்பகத்தின் பிரசுரமாக கடந்த ஆண்டு இறுதியில் வெளிவந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் எழுதத் துவங்கிய புதிய தலைமுறைப் படைப்பாளிகளுள் வஸீம் அக்ரம் முதன்மை பெற்று வளர்ந்து வருகிறார் என்பதனை அவரது இரண்டாவது தொகுதி சான்றுரைக்கின்றது. இக்கூற்றை இந்நூலுக்கு அணிந்துரைகளை வழங்கியுள்ள பேராசிரியர் ஏ. சண்முகதாஸ், மன்சூர் ஏ. காதீர் ஆகிய இருவரது குறிப்புகளும் நிறுவுகின்றன.

இந்த அடிப்படையில் இளங்கலைஞனின் கவிதா ஆளுமையை நாம் பார்ப்பதற்கு முன், கவிதைகளின் தன்மைகளை சற்று நோக்குவது தகும். இந்தத் தொகுதியிலுள்ள கவிதைகள் போர், இடப்பெயர்வு, ஆக்கிரமிப்பு, காதல், தன்னுணர்வு என்ற நிலை சார்ந்த ஏக்க உணர்வுக் கவிதைகளாக இடம்பெற்றுள்ளன. இந்தத் தொகுதிக் கவிதைகளின் ஒட்டுமொத்த வாசிப்பின் ஊடாக கவிஞர் தனது சூழலில் கண்ட அசாதாரண நிகழ்வுகளை, அடைவுகளை அப்பட்டமாக எழுத்தில் (கவிதை) பதிவு செய்துள்ளார். கவிதைகள், அதற்கு வழங்கப்பட்டுள்ள தலைப்புகள், நூலின் அட்டைப்படம் சொல்லுகின்ற சேதி என எல்லாமும் கவித்துவத்தின் கால்தடமாக இருப்பது கவிதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும்.

இந்தத் தொகுதியினூடாக வஸீம் அக்ரம் தனது பதிவாக கடந்தகால போர், அதன் தாக்கம், பெரும்பான்மை சமூகத்தின் நில ஆக்கிரமிப்பு படுகொலைகள் என்பனவற்றை (முக்கியமாக) தருகின்றார். அதற்கேற்றாற்போல் அவரது பின்வரும் கவிதை வரிகள் இடம் பெறுகின்றன.

**"துயரத்தின் வியாபகம் பதுங்கியிருக்கும்**
**ஆதிகால மகிழ்வின் நோக்கங்களை சப்பிய**
**போரின் நுண் இழைகள் கசிந்த**
**மண்ணிலிருந்து விடுபட்டுக்கிடக்கின்றது**
**உறவுகள் படர்ந்த எனது வானம்"**

இன்னொரு கவிதையில் கவிஞர் பின்வருமாறு (தனது) இடப்பெயர்வின் சுயத்தைப் பேசுகின்றார்.



**"கண்ணீர் துளிகளின் நடுவில்**
**வாழ்வின் மெழுகு உருகிக் கரைகின்றது**
**என் சுயம் தடமாறிய இடத்தில்"**

'மண் தின்னும் மனசு' என்ற கவிதையூடாக கவிஞர் தனது மண்ணின் அபகரிப்பை இப்படிப் பாடுகின்றார்.

**"நம்பிக்கைக்கு உரித்தான நிலத்தில்**
**மனம் விட்டு எழுதிய ஓவியம்**
**சிதலமறுந்து**
**இடம் விட்டுப் போகிறது"**

இவ்வாறான போரின் தன்மைகளை பிரதிபலிக்கின்ற கவிதைகளைப் போல் போர் சாராத கவிதைகளும் இந்நூலில் முக்கியம் பெறுகின்றன.

யுத்த காலமற்ற இன்றைய நிலையில் போர் சாராத கவிதைகள் தனித்துவம் பெறுகின்றன. இதில் மொழி என்ற வஸீம் அக்ரமின் கவிதை தனது தாய் மொழியை (தமிழ்) ஒரு தாயாக, பெண்ணாக, நிலைநிறுத்தி அதன் இருப்பு படுகின்ற துயர நிலை சூழலை மிகவும் கவித்துவமாகப் பேசுகின்றார். மொழி மிகவும் கேவலமாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இதனை கவிஞர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"எங்காவது அதன்**
**தாய் தேடி அலையும் குழந்தையாக**
**மொழி பிச்சையெடுத்து**
**அதன் வடிவத்தை நகர்த்துகின்றது"**

'குழந்தை ஓவியம்' என்ற கவிதை, குழந்தை ஒன்றின்மீது உள்ள காதலை சுட்டுகின்றது. இந்தக் கவிதையில் வரும் பின்வரும் வரிகள் கவிதையின் தரத்தை உயர்த்துகின்றது.

**"ஓர் அழகான புன்னகையின் ஒலியை**
**சேமித்த தைரியத்தில்**
**உன் நிழல் வரைபடங்களை**
**விரல் தூரிகையால் கிறுக்கிறேன்"**

இன்று கவிதை வெளிகளில் பெண்ணியம் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. வஸீம் அக்ரமின் கவிதைகளிலும் இதனை தவிர்க்க முடியாதுள்ளது. <u>பூட்டப்பட்ட</u> அறைகள் என்ற கவிதை பெண்ணியக் கவிதையாக இருக்கின்றது.

**"கறுப்பு நிற புகைமூட்டம்**
**கூரையின் முதுகில் படிந்து**
**வர்ணங்களால் நிரப்ப வேண்டிய**
**புன்னகையை பரீட்சிக்கின்றது"**

இன்றைய அதி நவீன கோட்பாட்டியல் கவிதைகளில் சர்ரியலிசக் கவிதைகளை தவிர்க்க முடியாது. இந்த அடிப்படையில் சர்ரியலிசக் கவிதையாக பின்வரும் கவிதையைச் சுட்டலாம்.

**-தாவுகை-**


**"ஒரு நிலவின் கண்கள் முழுவதும்**
**விழித்துக்கிடக்கின்றன**
**உணர்வுப் பூச்சி மொய்க்கின்ற**
**அந்தரங்களில்**
**மௌனத்தின் தடயம்**
**பூத்து ஒளிர்ந்து கிடக்கிறது"**

இவைதவிர முஸ்லிம் தேச அரசியல் கவிதையாக "மீசான் கட்டைப் பயணம்" என்ற கவிதையைக் குறிப்பிடலாம். (அக்கவிதையில் வரும் மீசான் என்பது இறந்தவனின் அடக்கஸ்தலத்தில் உள்ள மரக்கட்டை) இக்கவிதை பின்வருமாறு அமைகின்றது.

"எனது அகால மரணத்தின் பின்
மீசான் கட்டைகளின் இடுக்கில்
நடப்பட்ட மரக்கிளையில்
தடயமாக
நிச்சயம்
நெருக்கப்பட்ட எனது மண்ணின்
கண்ணீர் துளிகள் ஊற்றெடுக்கும்"

இவ்வாறு பல பரிமாண வகிபாகங்களில் இந்த "ஆக்கிரமிப்பின் கால்தடம்" கவிதை உலகில் தடம்பதித்து வாசகனின் உணர்வுகளில் இடம்பிடிக்கின்றது எனில் அது சிறப்பான கூற்றாகும். ■


# தேவை



புல் மேய்ந்து கொண்டிருந்தது மாடு.
மரத்தில் இருந்த குருவிக்குஞ்சு தாயைக் கேட்டது -
"ஏனம்மா மாட்டுக்கு நம்மைப்போல் சிறகு இல்லை?"
தாய்க்குருவி சிரித்தது.
"மாட்டுக்கு நம்மைப்போல் சிறகு தேவையில்லை"
என்றது தாய்.
தாய்க்குருவி சொன்னது :
"வானத்தில் புல் முளைத்தால்
மாட்டுக்கும் சிறகு முளைக்கும்"

நன்றி :
"காசி ஆனந்தன் கதைகள்"






## குடும்பத்தில் மிகழ்ச்சி

சாத்திரம் சொல்லக் கேட்டு
சந்தோஷமடைந்த பெற்றோர்
கோத்திரம் தழைக்கவந்த
குழந்தையே இதுவென் றெண்ணி
ஆர்த்தனர்; அழகிப்போடி
ஆனந்தப்பட்டார். கந்தர்
மாத்திரம் என்ன மற்ற
மனைவிபொன் னம்மா வோடு.

கனகமும் சேர்ந்து மிக்க
களிப்பிலே பேரன் தங்கள்
கனவெலாம் நனவாய் ஆக்கிக்
காட்டுவான் என்றும் சொன்னார்.
இனசனம் என்று வந்தோர்
இவன் பிள்ளை எங்களுக்கும்
தனமெலாம் தருவான் என்று
தம்முள்ளே மகிழ்ந்து போனார்.

பார்வதிப் பெத்தா நெஞ்சில்
பால்பொங்கி வழிய ஓடி
ஊரெலாம் கொள்ளுப்பேரன்
உயர்வினைச் சொல்லிச் சொல்லி
'பாரினை ஆளவந்த
பாலகன். பேரன் செல்லன்
பேர் சொல்ல வந்த பிள்ளை'
பெருமையாய்ப் பீத்திக் கொண்டாள்.

## குழந்தைக்குப் பெயர் வைத்தனர்

பேர் வைக்க வேண்டும் என்று
பெரியோர்கள் பேசிக்கொள்ள
ஆர்வத்தில் அன்னம்மாவும்
"அதுதானே!" என்றாள். செல்லன்
பார்வையால் சாமியாரைப்
பகன்றிடச் சொல்ல மற்றோர்
பேரினை அறியும் ஆவல்
பீறிட நின்றார். அன்னம்

"ஆனாவில் வைப்போம் பேரை
அது நல்லம்" என்றாள். கந்தர்
கானாவில் வைத்தால் என்ன
கனகமும் ஒத்துக் கொண்டாள்.
ஆனாலும் சாமி ஈற்றில்
அனைவரும் ஏற்கும் வண்ணம்
சூனாதான் பொருத்தம் என்றார்.
"**சுந்தரம்**" என்றான் செல்லன்.

**(இன்னும் விளையும்)**



# 'திசேரா'வின் படைப்புலகும், படைப்புகளும்

**-மொழிவரதன்.**

**'திசேரா'** தியாகசேகரன் ஆரையம்பதியில் பிறந்தவர். மலையகத்தில் வளர்ந்தவர், படித்தவர். புழங்கியவர். மலையக சமூகவியலை உணர்ந்தவர். இவரின் தந்தை ஓர் ஆசிரியர். மலையகப் பகுதிகளில் கடமை புரிந்தவர். ஹோல்புறுக் பிரதேசம் இவரது தந்தைக்கு பரிச்சயமானது ஏனெனில்,

அவர் ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத்தில் உதவி அதிபராக கடமை புரிந்திருக்கிறார். தந்தை மாத்திரமல்ல இவரது மூத்த அண்ணனும் தனியார் 'டியூட்டரி' ஒன்றினை பசுமலையில் நடத்தியவர். அவரும் நாடகத் துறையில் ஈடுபாடுகொண்டிருந்த ஒருவர்.

திசேராவின் சின்ன அண்ணன் ச.மணிசேகரனும் ஓர் ஆசிரியரே. இவர் நியமனத்தால் விஞ்ஞான ஆசிரியரெனினும் ஈடுபாட்டால் இந்து/சைவசமய/ தமிழ் கற்பிக்கும் ஆர்வலர்.

ச.மணிசேகரனின் இலக்கிய ஆர்வம் எழுத்துத் துறை குறிப்பிடத்தக்கதே. ஹோல்புறுக் டயகம பிரதேச இலக்கிய முயற்சிகளில் அவரது பங்களிப்பு 1986 – 1992 காலப்பகுதிகளில் குறிப்பிடத்தக்கனவே. இயல் இலக்கிய வட்டம் மணிசேகரன் முயற்சியின் பிரதிபலிப்பு.

திசேரா, குழந்தை பாலா போன்றோர் உருவாக களமாக இருந்தது இயல் இலக்கிய வட்டமே. இப்பிரதேசத்தில் அதிபராக கொத்தணி அதிபராக கடமையிலிருந்த மொழிவரதன் எனும் மகாலிங்கம் போன்றோரை இணைத்துக் கொண்டு 'இயல்' இலக்கிய வட்டம் **'இயல்'** எனும் இலக்கியச் சஞ்சிகையை இலக்கி ஹோல்புறூக் பஸார், அக்கரப்பத்தனை எனும் விலாசத்திலிருந்து வெளியிட்டது.

இந்தப்பின்னணியில் உருவாகியவர்தான் **'திசேரா'** எனும் படைப்பாளி. ஹோல்புறூக் பிரதேசம் அல்லது ஆகராஸ் எனும் டயகம பிரதேசம் பல இலக்கியவாதிகளை படைப்பாளிகளை உள்வாங்கிய பிரதேசம் எனலாம். அல்லது உருவாக்கிய பிரதேசம் எனலாம்.

மன்றாசியில் பிறந்து வளர்ந்த கவிஞர்/ கல்விமான் சு.முரளிதரன் குறிப்பிடத் தக்கவர். அகளங்கள் தர்மராஜா, பசுமலையோகன் எனும் பெயரில் எழுதிய

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் யோகராஜா, எழுத்தாளர் மு.சிவலிங்கம், மொழிவரதன் எனும் மகாலிங்கம் போன்றோர் இப்பிரதேசத்தை ஏதோ ஒரு வகையில் இலக்கியவளத்தால் போஷித்தவர்கள். இந்தப் பின்புலத்தில் திசேரா இயல்கலை வட்டத்தில் இயங்கியவர்.

1996 ஆம் ஆண்டளவில் பிரதேச இலக்கிய கர்த்தாக்களை பாராட்டும் நிகழ்வு ஒன்றினை ஹோல்புறூக் த.மவியில் அதன் அதிபர் மகாலிங்கம் அவர்கள் அங்கு அன்று கடமைபுரிந்து கொண்டிருந்த ச.மணிசேரனின் ஒத்துழைப்புடன் செய்திருந்தார்.

சாரல்நாடன், குறிஞ்சி தென்னவன், சு.முரளிதரன், மு.சிவலிங்கம், மல்லிகை சி.குமார் போன்றோர் பாராட்டப்பட்டனர். காலம் செல்லச்செல்ல இயல் இலக்கிய வட்டம் அதன் செயற்பாட்டை இழந்திருந்தது. இதன் தொடர்ச்சியாக அதன் குழந்தையாக **"மூங்கில் கலை இலக்கிய வட்டம்"** பிறந்தது.

குழந்தை பாலா எனும் K.பாலக்கிருஷ்ணனின் முயற்சியின் தோற்றமே மூங்கில் கலைவட்டம். தி.ஞானசேகரனின் **'லயத்துச் சிறைகள்'** மொழிவரதனின் **'மேகமலைகளின் ராகங்கள்'** (சிறுகதைத் தொகுப்பு), **'ஒரு நாடும் மூன்று நண்பர்களும்'** (குறுநாவல் தொகுதி), சிவனு மனோகரனின் **'ஒருமணல் வீடும் சில எருமை மாடுகளும்'** (சிறுகதைத்தொகுதி) போன்ற நூல்களையும் திசேராவின் **'ஏவிவிடப்பட்ட கொலையாளி'** (குறுநாவல்) போன்ற படைப்புக்களை இப் பிரதேசத்தில் அறிமுகம் செய்தது. **'ஆகராஸ் கலை இலக்கிய வட்டம்'** மொழி வரதனின் தலைமையில் 1989ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டாலும் அது காத்திரமான வேலைகளை செய்யவில்லை அதற்குப் பல காரணங்கள் இருந்தன. இந்தப் பின்னணியில் 'ஆக்ராஸ்' பிரதேசம் திசேராவை மாத்திரமல்ல மேலும் பலரை அறிமுகம் செய்துள்ளது, உருவாக்கியுள்ளது.

கிளாஸ்கோ அருண் சிவஞானம், குமரன் நடராஜா, குமரன் மகேஸ்வரி, ஷீலா மாணிக்கம், அழகு கனகராஜ், டயகம கணபதி, டயகம காளிதாசன் போன்ற பல புதிய இளம் படைப்பாளிகளை அறிமுகம் செய்து வருகின்றது. திசேரா இந்தப் பின்புலத்தில் வந்த ஒருவரே. கணித ஆசிரியரான திசேராவின் எழுத்து முயற்சிகள் விரிவாக ஆராயப்பட வேண்டியவையே.

சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம், நாடகப் பிரதி, நாடகம் எனப் பல துறைகளிலும் தனது கை வண்ணத்தைக் காட்டி வருபவர் எனில் பிழையில்லை. பாரம்பரியமான கதை 'சொல்லலிருந்து' விடுபட்டு உமா



வரதராஜன், கோணங்கி போன்றோரின் பாங்கில் ஆரம்பம், உச்சம், முடிவு என்று ஏதுமில்லாது கதையை நகர்த்திச் செல்லும் திசேராவின் **'வெள்ளைத் தோல் வீரர்கள்'** (சிறுகதைத் தொகுதி), **'கபாலபதி'** (சிறுகதைத் தொகுதி) போன்றவை களைவிட **'ஏவி விடப்பட்ட கொலையாளி'** (நாவல்) வேறுபட்டுள்ளது என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

கதையில்லா கதையாக மாறுபட்ட கதைசொல்லும் பாங்காகி வெள்ளைத் தோலில் தொடங்கிய 'திசேரா' ஒரு விவரணக் கதையாக **'ஏவி விடப்பட்ட கொலையாளி'**யை உலவவிட்டுள்ளார் எனலாம்.

மிக நெருக்கமும், இறுக்கமும், ஆழமும் கொண்ட அவரது எழுத்துப் போக்கு இக்குறுநாவலில் சற்றே இறங்கி இலகுபடுத்தப்பட்டுள்ளதை அவ தானிக்கலாம். கலை உணர்வு, கலாபூர்வமான கதை நகர்த்தல் அவரது பாணி **'கபாலபதி'** அவரது கதைகளின் மையம் எனலாம்.

வட கிழக்குப் பிரச்சினைகள், யுத்தம், யுத்த சீரழிவுகள், சீரழிந்த "பேய் அரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" – வெளிப்பாடு அவரது 'கபாலபதி' எனில் பிழையில்லை.

பாலியல் வல்லுறவு, மனிதம் செத்த மயான வாழ்வு, நீதிமகள் தலைகுனிந்த நிலை, அகதிகள் வாழ்வு, காக்கிச்சட்டைகளின் அட்டகாசம் என்பனவற்றை **'மாண்டான் சரிதம்'** பறைசாற்றும்.

கபாலபதி மிகச் சிறப்பாகவே யுத்தம் பற்றி கூறுகிறது. கதைகளை வாசித்துச் செல்லும்போது வட கிழக்கு பிரச்சினைகளின் கெடுபிடிகள் தெரிகிறது என்றாலும் கதையை வாசித்து விளங்கிட ஒரு 'பரிச்சயம்' தேவைப்படுகிறது. திசேராவின் பாணி ஒரே முறையில் முழுமையாக விளங்கிட இயலுமா என்பது ஆரம்ப வாசிப்பாளர்களுக்கு ஒரு வினாவாகவே இருக்கும்.

ஆனால், **'ஏவிவிடப்பட்ட கொலையாளி'** சுனாமியின் அவலத்தை அப்படியே அம்பலப்படுத்தும் ஒரு வரலாற்றுத் தகவல் பொக்கிஷமாகும். சுனாமி அனர்த்தத்தின் அருட்டலில் முகிழ்த்த ஒரு குறுநாவல் இதுவாகும்.

நேரில் அதைக் கண்டவர்கள், நேரில் அதில் பாதிப்புற்றோர் இன்றும் அச்சம்பவத்தை (2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் நாள்) மறக்கவில்லை.

நெஞ்சைப் பிழியும் நிகழ்வுகளின் கலவையே சுனாமி அனர்த்தம். மனிதன்

ஒரு மகத்தான படைப்பு என கார்ள்மாக்ஸ் கூறினார். என்றாலும் சுனாமி மனிதனின் பல்வேறு முகங்களை தோலுரித்தது என்பதே அதன் மற்றொரு கோணமாகும். 'பார்த்தசாரதியின்' கங்கை இன்னும் வற்றிவிடவில்லை என்பது போல் மனிதர்களும் வாழ்கிறார்கள் என்பதே யதார்த்தமாகும்.

பாம்பு மாநாடு (கல்லடி பாலத்தடியில் பாம்புகள் கூடியது ஒரு உண்மை நிகழ்வாகும்). பரதேசி வந்தது (இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக கூறினார்கள்), வல்லுறவு (இப்படி நிகழ்ந்தது உண்மையே), விரல்களும் காதுகளும் (இது நிகழ்ந்த ஒன்றே) மேற்குறிப்பிட்ட விடயங்கள் சுனாமி அனர்த்தத்துடன் பின்னிப் பிணைந்துள்ளவையாகும்.

சுனாமி அனர்த்தத்தினை மையமாகக் கொண்டெழுந்த கதையே இந் நாவல். எனினும் பாரம்பரியமான கதாபாத்திரங்கள் முனைப்பு பெறவில்லை அதே வேளை அனர்த்தத்தின் ஒரு விபரணப்பின்னணியே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. கதாபாத்திரங்கள் ஊடாக கதை நகரவில்லையெனினும் கூட நடந்த நிகழ்வுகளின் அருட்டுணர்வுகள் நாவலில் இழையோடி வருகின்றன. கொடுங்கோன்மை மிக்க அனர்த்த விளைவுகள் அவரது – திசேராவின் எழுத்துக்களில் மிக நன்றாகவே பளிச்சிடுகின்றன. "வீட்டுச் சுவரைச்சாய்த்து பலரை நசித்தன, பனை மரங்களை வீட்டுக்குள் கொண்டுவந்தன, மலசல கூடங்களை தலை கீழாக்கிப் போட்டன" போன்ற அவரது விபரிப்பு சுனாமியின் கோர தாண்டவத்தை கண்முன் கொணர முயல்கிறது.

"பிணங்கள் வைக்கக்கூட இடமில்லாமல் போனது. ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டன. பிணங்களிலிருந்து எழுந்த நெடி மூக்கை உறுத்தியது. தன் குடும்பத்தில் ஒருவரையாவது பார்த்துவிடும் – பிணமாகவேனும் – எண்ணத்துடன் வந்த ஒருத்தி வயிறு குமட்ட வாந்தி எடுத்தாள்... போன்றன உயிர்ப்பான எழுத்து வன்மையை காட்டுகின்றது.

ஊர்கள், கிராமங்கள் அழிக்கப்பட்டுக்கிடந்தன – "மணலால் மூடுண்டு இருந்த கிராமத்தின் பாதியை அவர்களே தோண்டி ஆராய்ந்தார்கள்" என்ற வாக்கியம் அழியுண்ட நாவற்குடாவை கண்முன் கொணர்கிறது. குறியீடாகவும், பூடகமாகவும் கதைகூறும் திசேராவின் உத்தி **'ஏவிவிடப்பட்ட கொலையாளி'**யிலும் பிரதிபலிக்கிறது. அவர் சொல்லும் சந்தனக்காடு, மினியின் கதை, நுரைக்கடிதம், முதலை மாநாடு போன்றனவற்றை மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.



'முதலைகளெல்லாம் பதுங்கி தங்கள் நிழலை தாங்களே தின்று ஊருக்குள் நகரத் தொடங்கின.

இது எழுதிமுடிக்கையில் வயிறும், கன்னமும் பருத்து இறக்கை முளைத்துப் பறந்து திரிந்த முதலைகள் மட்டுந்தான் தென்பட்டன.

இப்போது குழந்தை முதலைகள் கூட பிறக்கும்போதே இறக்கையுடன் பிறக்கின்றன.

அவைகளுக்கே சகல தலைமைப்பதவிகளையும் ஒப்படைப்பதென ஆலோசனை நடத்தப்பட்டது...'

'திசேரா' இவ்வாறு பூடகமாக கதைகூறும் பாங்கு அவருக்கே உரியது.

**'ஏவி விடப்பட்ட கொலையாளி'**யின் புத்தக அமைப்பு கைக்கு எடுத்து வாசிக்க சுகமாகவுள்ளது. இறுக்கமான நூலினால் கட்டப்பட்டு தெளிவான எழுத்துப் பதிப்புக்களுடன் வெளிவந்துள்ளமையை குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். 'கச்சிதமான' புத்தக வடிவமைப்பு நேர்த்தியான உள்ளடக்கம் நன்று. என்னுரை, முன்னுரை ஏதும் பெரிதாக இல்லையெனினும் கடைசி பக்கத்தில் திசேராவின் ஒருசில வரிகள் உள்ளன. சித்திரங்கள் ஒரு பிளஸ்பொயின்ட் எனில் அது மிகையல்ல. மிக அருமையான சித்திரக்கீறல்கள் சித்திர ஆசிரியர்களினாலும் பாராட்டப்பட்டுள்ளன.

திசேரா கிழக்கு மாகாணத்தின் மண்ணில் பிறந்தமையால் அந்தக் கடற்பரப்பின் வாசத்தை இரத்தத்தோடு உணர்ந்தவர். அந்த மீனவர்களின் வியர்வை, ஏழ்மை, ஏக்கம், கனவுகள் அபிலாஷைகளை உள் வாங்கியவர். ஆரையம்பதி போன்ற கடல்வாழ் மக்கள் கூட்டத்தின் நம்பிக்கைகளை உணர்ந்தவர். அவர் ஒரு கணித ஆசிரியராதலால் இலக்கியத்தை புதிய திசையில் நகர்த்தத் துடிப்பவர். அவர் எழுத்து மேலும் மக்கள் இலக்கியம் சார் படைப்புலமாக மலர வேண்டும் என்பதே மக்கள் இலக்கியம் பற்றிப் பேசும், எழுதும் எழுத்தாளனின் வேண்டுகோளாக இருக்க முடியும்.

மிகப்பரந்த உலகில், மிகப் பரந்த இலக்கியத் தடத்தில் 'என்.ஆத்மா' போன்றோர்களின் வழிகாட்டலில் சமூகம் சார்ந்த படைப்புக்கள் மேலும் உயிர்த்தெழ வேண்டுமென விழைகிறேன். ■

# நாங்கள்

கொழுந்துகளைக் கொய்து
விமோசனப் பிரசவங்களை
இழந்து நிற்கும்
எங்களின்
மலட்டு விரல்கள்!

தோட்டக்காட்டானென்று
தொற்றி நிற்கும்
சொல் விருதுகளின்
சொந்தக்காரர்கள்!

உச்சிமலை உழைப்புகள்
உயிரை உரசி
வாழ்க்கை மைதானத்தில்
தினமும்
மல்லுக்கட்டுகின்ற
மல்யுத்த வித்தைகள்

அதிகாரக் குரலுக்கு
அப்பாவிகளாகி
அசைந்தாடி
அடங்கிப் போகின்ற
பெட்டிப் பாம்புகள்!

அசத்தியங்களை
சத்தியங்களாய் ஏற்று
தானத்தை தவறவிடும்
தலையாட்டும் பொம்மைகள்!

சுகபோகங்களின்
சொந்தக்காரர்களுக்கு முன்
நரகங்களைக் கட்டி வாழும்
நாதியற்ற ஜடங்கள்!

ஆறடிச் சிறை
அட்டைக் கடி
மலை உச்சி
மாரடிக்கும் குளிர்
இவைகள்
எங்களின் சீவியத்திற்கான
சீதனச் சொத்துக்கள்!

கூடை தூக்கி
கூனிப்போன முதுகுகள்
கேள்விக்குறியான
வாழ்க்கை புத்தகத்தில்
வடிவமைக்கப்பட்டு
பரீட்சை எழுதுகின்ற
பாவச் சின்னங்கள்
நேரத்தின் சிநேகிதனாய்
நிறத்தை மாற்றும்
பச்சோந்திகளின்
பசி தீர்க்கும் தீனிகள்!

பொருளாதாரச் சந்தையில்
போட்டியில் ஓடி
வெற்றிகளைக் குவித்தாலும்
முன்மொழியப்படாத
முகவரி இழந்த
முகங்கள்!

வாக்குறுதிகளை
வரமாகி வழங்கும்
அதிகார அரங்கில்
அடிபடும் பந்துகள்!

தொலைக்கப்பட்ட
வெற்றிக்கம்பத்தை
தேடித்தேடி
தினமும்
மலையக மைதானத்தில்
ஓடிக்கொண்டிருக்கும்
மைந்தர்கள்!


கலாபூஷணம்
கவிஞர் பதியதளாவ பாறூக்






# கதைகூறும் குறள் - 9

## துன்பம் தாங்கிய தொண்டு



'காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக்குழைத்தோமடா – என் தோழனே!
பசையற்றுப் போனோமடா!'

**'நவசக்தி'** இதழில் கவிஞரான 'சொரிமுத்து' எழுதிய பாடல் இது. இவர் தமிழ் நாட்டின் சொல்வேந்தர். பேசுவது என்பது இவரது முழக்கமாக இருக்கும் என்பர். பொதுவுடமை தத்துவத்துக்காக வலிந்து வறுமையை வரித்துக்கொண்ட மேதை; கால் மார்க்சைப் போல. இறுதிவரை தனக்கென்று எதையுமே தேடிவைத்ததில்லை – புகழைத் தவிர. திரு.வி.க.வுக்குப் பின் சங்கம் வளர்த்துத் தொழிலாளர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த பெருமகன். தமிழ் நாட்டில் இன்றும் கம்யூனிஸ்டுகள் தலைநிமிர்ந்து மக்களிடையே வலம் வருகிறார்கள் எனின், அது இவர் கொடுத்த – தொடுத்த சாமானியர்கட்கான சமத்துவப் போராட்டங்களின் பெறுபேறுகள்தான். போராட்டமே வாழ்க்கை – வாழ்க்கையே போராட்டமானது. அப்பா பெயர் பட்டன்பிள்ளை, அம்மா பெயர் உமையம்மாள். இவர்கள் பெற்ற ஒன்பது குழந்தைகட்குள் இவர் நான்காமவர். முதல் மூன்றும் தவறிப்போக, இவராவது நிலைக்கட்டும் என்று ஆசாரப்படி மூக்குத்தி குத்தி வைத்தார்கள். அதனால் 'மூக்காண்டி' என்றும் பெயர் வந்தது. பெற்றோர் இட்டபெயர் 'சொரிமுத்து' அப்புறம் இவர்மேல் அன்பு செலுத்திய மக்கள் வைத்த பெயர் 'ஜீவா'. இவர்தான் ஏழைப்பங்காளர், **தோழர் ப.ஜீவானந்தம்.**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர் கோவிலிருந்து பத்துக்கிலோமீற்றர் தூரத்தில் பச்சை படர்ந்திருக்கும் வயல்வெளி கொண்ட கிராமம் 'பூதப்பாண்டி'. அங்குதான் அந்த எளிமையான வீடுண்டு. சூழல் நிலைகள் இவரை இளம்வயதிலேயே ஆக்கிரமித்தன. அதனால் கதை, கவிதை, நாடகம் என்று எழுதத்தொடங்கினார். உயர்நிலைப் படிப்பு கோட்டாறு உயர்நிலைப்பள்ளியில் இடம்பெற்றது. விளையாட்டுக்களில் ஆர்வம் கொண்ட ஜீவா, அதற்காக கழகம் நடத்தியதுமுண்டு. மிகச் சிறுவயதிலேயே காந்தியத்தின் ஆளுமை இவரைப் பாதித்தது. அதனால் பிடிவாதமாக கதர் உடைகளை அணியத் தொடங்கினார். அப்போ

நடந்த சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றியமை பள்ளிப்படிப்பை பாதியில் பறித்தது. அதன்பின் தாழ்த்தப்பட்டவர்களை கோயிலுக்குள் அழைத்துச் செல்லும் போராட்டத்தை நடாத்தினார். அதனால் வீட்டில் பூசல் உண்டானது.

காந்தியால் ஈர்க்கப்பட்ட ஜீவா இராமநாதபுரம் மாவட்டத்தில் 'சிறுவயல்' என்ற கிராமத்தில் காந்தி பெயரில் ஆசிரமம் நிறுவினார். ராட்டையில் நூல் நூற்றார். கிராமத்துச் சிறார்களையும் நூல் நூற்கப் பண்ணினார். இந்த ஆசிரமத்தை மகாத்மாவே நேரில் வந்து ஆசீர்வதித்திருக்கிறார். அந்தச் சந்திப்பில் ஜீவா மகாத்மாவுடன் தைரியமாக சில விடயங் களை விவாதித்திருக்கிறார்.

1925ல் தமிழ்நாட்டில் காங்கிரஸின் தலைவராக இருந்த ஈ.வே.ராமசாமி நாயக்கர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பிரச்சினையில் அதிலிருந்து வெளியேறினார். அந்தக்கதை மிகவும் சுவாரஸியமானது. அந்த நாட்களில் காங்கிரஸ் சார்பில் வ.வே.சு.ஐயரால் 'சேரன் மாதேவி'யில் ஒரு குருகுலம் நடத்தப்பட்டு வந்தது. அந்தக் குருகுலத்தில் பிராமணக் குழந்தைகட்கு வேறாகப் படிப்புச் சொல்லித்தரப்பட்டது. தாழ்த்தப்பட்ட குழந்தைகள் தரையில் உட்கார்ந்தே பாடம் கேட்டார்கள். பிராமணக் குழந்தைகளுக்கு இருந்த இருக்கை வசதிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கவில்லை. அத்துடன் சமையல், சாப்பாடு, துணிகழுவுதல், தூங்கும் இடம் என்பன வெவ்வேறாகவே இருந்தன. தமிழ் நாட்டுக் காங்கிரசினுள் பெரியார் ஈ.வெ.ரா தலைமையில் கொந்தளிப்பு உண்டாயிற்று. அதனால் 1927ல் 'மகாத்மா' தமிழ் நாட்டுக்கு வருகை தரவேண்டியதாயிற்று. அவரால் ஒரு நல்ல தீர்வு வருமென பெரியார் எண்ணினார். மகாத்மாவின் தீர்ப்பு இப்படி இருந்தது; "படிப்பு, சாப்பாடு, தங்குமிடம் எல்லாம் இனி ஒன்றாக இருக்கட்டும். சமையலும் ஒன்றாகவே இருக்கலாம். ஆனால் சமைப்பவர்கள் பிராமணர்களாக இருக்கவேண்டும்" இந்தத் தீர்ப்பு பெரியாரை பிராமணர்களுக்கு எதிராக எழவைத்தது. ஜீவாவின் 'சிறுவயல்' ஆசிரமத்தில் காந்தியுடன் நடந்த விவாதமும் இதுதான். மறுநாள் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறுவதான அறிவிப்பு வந்தது. அதன் தொடர்பாக ஜீவாவும் காந்தியத்தைக் கைவிட்டார்.

அதன்பின் பெரியாரின் கொள்கைகள் இவரை ஈர்த்தன. சாதியத்தை ஒழிக்க காந்தீயம் சரியான பாதையல்ல என்று எண்ணினார் இவர். ஆகவே தீவிரமான தொண்டர் ஆனார். பெரியாரின் கூட்டங்களுக்கு அடிக்கடி போனார். பெரியாரும் இவரது ஆர்வம் கண்டு அரவணைப்புடன் நடத்தினார். அங்கும் ஒரு பிளவு வந்தது. ஒருமுறை பெரியாரிடம் இவர் கேட்டார்; "ஐயா! நீங்கள் சாதியத்தை ஒழிக்கப் போராடுகிறீர்கள். தாழ்த்தப்பட்டவர்க ளுக்காகவும், பெண்ணடிமையை எதிர்த்தும் எழுந்துள்ளீர்கள்! ஆனால் இன்னொன்றை மட்டும், அதாவது தொழிலாளர்கள் ஏழைகள் பற்றி ஏன் உங்கள் போராட்டம் விரிவுபடுத்தப்படவில்லை? காரணம் சொல்லுங்கள்!" என்றார். பெரியார் சொன்னார்; "இப்போதைக்கு இது போதும். நான் தொழிலாளர்களுக்கான போராட்டமெதுவும் தொடங்கமாட்டேன். அது இப்போ தேவை யுமில்லை" என்று. ஜீவா மனமொடிந்து போனார். நீண்ட விவாதத்தின் பின்னும் பெரியார் தன் பிடிவாதத்தை விட்டுக்கொடுக்காததால், அந்தப் பெரியார் பிணைப்பைப் பிரித்துவிட்டு அங்கிருந்தும் வெளியேறினார் ஜீவா.



வெளியே வந்தவர் உள்ளத்தில் தனித்தமிழ் இயக்கம் நடத்திய 'மறை மலை அடிகள்' பற்றிய கவனம் வந்தது. அவர்பால் இவர் சற்று இறுக்கமானார். ஒருமுறை அடிகளைப் பார்க்க இவர் போனார். வாயிலண்டை நுழையும்போது தபால்காரன் "சார்! போஸ்ட்" என்று கூவிக் கொண்டு அங்கு நிற்பதைக் கண்டார். உள்ளே இருந்து அடிகளின் குரல் கேட்டது. தன் உதவியாளரை அழைத்து; "அப்பா! போஸ்ட்மன் வந்திருக்கிறார் லெற்றர்களை வாங்கு" என்ற குரல்தான் அது. தனித்தமிழ் முனிவரின் ஆங்கில உச்சரிப்பு இவரை அசரவைத்தது. உள்ளே போனவர் அடிகளிடம், தான் ஒழுங்கு செய்திருக்கும் கூட்டம் ஒன்றுக்கு பேசவருமாறு ஒரு திகதி கேட்டார். அங்கே இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. அடிகள் மீண்டும் தன் உதவியாளரிடம்; "அந்த டயறியை எடுத்துவா!" எனக் கட்டளையிட்டதுதான் அது. அப்புறம் டயறி வந்தது. இவருக்காக ஒரு திகதி கொடுக்க அடிகள் டயறியை திருப்பியபோது, அந்த டயறிமுழுதும் ஆங்கிலத்திலேயே குறிப்புகள் இருப்பதை இவர் அவதானித்தார். இன்னும் ஜீவா மனதால் பாதிக்கப்பட்டார். "தனித்தமிழ் இயக்கம் நடத்தும் நீங்கள் இப்படிச் செய்யலாமா? இது மக்களை ஏமாற்றும் வேலையல்லவா?" எனக்குமுறினார் இவர். அடிகளோ, சாதாரணமாக, "குறிப்பு எடுப்பதற்கும் உடனடி அழைப்புகட்கும் ஆங்கிலம் சுலபமாக இல்லையா?" என்றிருக்கிறார். அந்தப்பதில் இன்னும் இவரை வேதனைக்குள்ளாக்கியது, வெறுப்படையவும் வைத்தது. "எல்லாமே வேசம்தான்" என்றார் ஜீவா. அத்துடன் அடிகளார் பக்கம் இவர் அடியெடுத்துவைத்ததில்லை. ஜீவா யதார்த்தமானவர் என்பதால் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபட என்றும் விரும்பியதில்லை. அதுதான் இவரது தனித்தன்மையாக எப்போதும் மிளிர்ந்தது.

அழகான இலக்கியப் பேச்சுக்களை ஜீவா மேடைகளில் பேசுவார். 'அப்பரின்' அருந்தமிழ்ப்பாடல்கள் ஜீவா என்ற மனிதரால் இலக்கியமாக மேடைகளில் முழங்கின. "இவர் அளவுக்கு இன்றுவரை எவரும் 'அப்பர்' பாடல்கள் பற்றி அழகான விளக்கம் சொல்லவில்லை" என்றிருக்கிறார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன். அதே நேரம் தொழிற்சங்க மேடைகளில், மினுக்காக உணர்ச்சியையும் கருத்தினையும் முன்வைத்து 'மக்கள் தமிழில் பேசுவார்' ஜீவா. இலக்கிய மேடைக்கும் தொழிற்சங்க மேடைக்கும் இவரது பேச்சுத்தமிழ் வேறுபட்டிருக்கும். அது ஒரு தனிக்கலை என்கிறார்கள். தொழிற்சங்க மேடைகளில் பேசிய அந்த உணர்ச்சித் தமிழே இவரைத் திருச்சிச் சிறையில் அடைபடக் காரணமாயிற்று. அங்குதான் தொழிலாளர் தலைவரான 'சிங்கார வேலரை' இவர் சந்திக்க நேர்ந்தது. இந்தச் 'சிங்கார வேலரே' தமிழ்நாட்டில் சமதர்மக் கருத்துக்களுடனான தொழிலாளர் போராட்டத்தை முதலில் முன்னெடுத்தவர். அதனால் சிறையில் இருந்தார். அந்தச் சந்திப்புத்தான் ஜீவாவை தோழர் ஜீவானந்தம் ஆக்கியது. இதுவே ஜீவா கொம்யூனிஸ்டான வரலாற்றுப் பின்னணி. அப்புறம் வெளியேவந்த ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசாரப் பீரங்கியானார். கட்சியைத் தமிழ்நாட்டில் கட்டியெழுப்ப டெல்லியில் அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக அன்றிருந்த பேராசிரியர் 'டாங்கே' யை வரவழைத்தார். டாங்கேயின் வரவின்பின் தமிழ்நாட்டில் பொது வுடமைக் கட்சிக்கு ஒரு அடித்தளமும், வெளியுலக அங்கீகாரமும் கிடைத்தது. சர்வதேசப் பார்வை தமிழ்நாட்டின்மேல் விழுந்தது எனலாம். இவருடன் பாலதண்டாயுதம், இராமமூர்த்தி, கல்யாணசுந்தரம் என பல தலைவர்கள் உருவானார்கள். இன்றைய இலக்கியச் செல்வர் தா.பாண்டியன் ஜீவாவின் வார்ப்பு எனலாம்.

தீரர் 'பகத்சிங்' கின் வாழ்க்கை இவரை மிகவும் கவர்ந்தது. மரணதண்டனை நிறைவேற்றப் பட இருந்த அந்த இறுதிநாள்; பகத்சிங்கிடம் "உனது கடைசி ஆசை என்ன?" எனக் கேட்கப்பட்டது. தான் வாசிப்பதற்கான நூலின் பெயரைக்குறிப்பிட்டு அதைத் தருவிக்குமாறு கேட்டாராம் பகத்சிங். அவரைப்போலவே இவரும் தீராத வாசிக்கும் பழக்கம் கொண்டவர். அவரது "நான் ஏன் நாத்திகன் ஆனேன்" என்ற நூலை இவர் அழகாகத் தமிழில் மொழி ஆக்கம் செய்து வெளியிட்டார். தடைசெய்யப்பட்ட நூலை வெளியிட்டார் என்பதற்காக 1934ல் சிறை செல்ல நேரிட்டது. இது ஜீவாவின் இரண்டாவது சிறை வாழ்க்கை.

வெளியில் வந்தவர் மீண்டும் தீவிரமானார். நாஞ்சில் நாட்டில் நடந்த வாலிபர் இயக்கக் கூட்டங்களுக்குப் போனார். அங்கு நகராட்சியின் வரியை எதிர்த்துப் போராட்டம் நடாத்தினார். அதே நேரம் திருவிதாங்கூர் தமிழியக்கப்போராட்டத்துக்கும் ஆதரவானார். அந்நாட்களில் பல தொழிலாளர் அங்கங்களைக் கட்டமைத்தார். பாதிக்கப்பட்ட விவசாயிகள் பக்கம் இவரது பார்வை பதிந்தது. அது பெரிய போராட்டமாக உருவெடுத்தபோது இவரைக் கைதுசெய்யும்படியான முயற்சிகள் நடந்தன. சகாக்கள் பலர் கைதானார்கள். அந்த நேரம் ஜீவா தலைமறைவானார். அந்தத் தலைமறைவு வாழ்க்கை பலவித அனுபவங்களையும் இலக்கிய ஆர்வத்தையும் கொடுத்தது. இஸ்லாமியத் துறவிபோலவும், நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பனியின் நடிகனைப் போலவும் இருந்திருக்கிறார். ஒருமுறை இவர் தலையை மொட்டையடித்து உருமாற்றித் தன்னுடன் வைத்துக்கொண்டார் எம்.ஆர்.ராதா. சில நாட்களில் உடல் நலக்குறைவுடன் என்.எஸ்.கிருஷ்ணன் (கலைவாணர்) வீட்டு மேல்மாடியில் தலை மறைவு வாழ்க்கையை நடத்தினார் இவர். அது ஓராண்டுக்கு மேல் நீடித்தது. அந்த நேரம் இவருக்காக வெளியில் இருந்து செய்தியுடன் கலைவாணர் வீட்டுக்கு வந்து சந்திப்பவர் கலைஞர் மு.க. அந்தத் தலைமறைவு நாட்களில் - 41வது வயதில் ஒரு ஆசிரியையுடன் திருமணம் நடந்தது, அந்த ஆசிரியை இவரைக்கொள்கை ரீதியாக நேசித்தவர்.

அப்புறம் காமராஜர் ஆட்சியில் கம்யூனிஸ்டுகள் மேல் இருந்த தடைகள் அகற்றப் பட்டன. அதன்பின் நடந்த சட்டசபைத் தேர்தலில் இவர் 'வண்ணாரப் பேட்டை' தொகுதி யின் சட்டமன்ற உறுப்பினரானார். அந்தச் சட்டசபை நாட்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இவரே ஆங்கிலத்தால் தமிழுக்கு ஆபத்து வரப்போகிறது என்பதை (இன்றைய தமிழ்நாட்டின் கையறுநிலை) அன்றே சட்டமன்றத்தில் எடுத்துக்கூறியவர். "ஹிந்தியை எதிர்ப்பதாகக் கூறி ஆங்கிலத்தை அரசோச்சப் பார்க்கிறீர்கள்" என்று 'அண்ணா' வைப் பார்த்து எச்சரித்தவர். அந்த நாட்களில் தமிழை நிர்வாக மொழியாக ஆக்கவேண்டுமென்று முதலில் சட்டசபையில் பிரேரணை முன்வைத்தவரும் இவரே. தன் வேதனத்தைக்கூட ஏழைகட்காக இழந்துநின்றவர் ஜீவா. கட்சியின் பணத்தில் காலணாவைக்கூடத் தீண்டியதில்லை ஜீவா, மிகவும் உடல் நிலை மோசமடைந்த நிலையிலும்கூட பட்டினியுடன் இருந்திருக்கிறார். கட்சிப் பணத்தில் எதையும் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறார். இவர் 'தாம்பரம்' கிராமத்தில் வாழ்ந்த இல்லம் அதற்குச் சான்றானது. தன் உடைகளுக்கு மாற்றுடை கூட வைத்திருக்கவில்லை ஜீவா. அந்த இல்லத்தில் இருக்கைகள் எதுவும் இல்லை. புத்தகங்களும் இவருடன் தரையில்தான் தூங்கும். காமராஜரின் ஆட்சியின்போது அவர் இவரைக் கவனித்து வந்ததுண்டு. ஒருமுறை இவரைப் பார்க்க அவர் வந்தபோது, வீட்டின் பின்பக்கமிருந்து முன்பக்கம் வர சிறிது நேரம்



ஆயிற்று. அதுவரை காத்திருந்தார் முதல்வர் காமராஜர். அப்புறம்தான் இவரது மாற்றுவேட்டி நிலைமை அம்பலத்துக்கு வந்தது. நெகிழ்ந்துபோன கமராஜர் இவரை கட்டியணைத்து கண்கலங்கினார் - கடிந்தும் கொண்டார்.

கம்ப இராமாயணம், பாரதி பாடல்கள் என்பவற்றின் அழகாக நீண்ட நேரம் பேசும் ஜீவா, வள்ளல் பெருமானின் சன்மார்க்கத்தையும், சம தர்மத்தையும் மிகத் தெளிவாகத் தெவிட்டாமல் இணைத்துப் பேசுவார். தொழிலாளர் கூட்டங்களில் 'மைக்' இன்றியே உரக்கப் பேசிப் பேசி தன் காதுகளின் புலன்களை இழந்துவிட்டவர் இவர். இறுதிக்காலத்தில் கேட்கும் சக்தி இன்றியே வாழநேர்ந்தது. "கற்பனா சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்" என்ற சிக்கலான நூலை தமிழில் தந்தார் இவர். இவரது 'பெண்ணுரிமைக் கீதங்கள்' புகழ்பெற்ற நூலாகும். இறுதிவரை பெண்ணுரிமை - சமதர்மம் இரண்டிலும் விடாப்பிடியாக இருந்தார் ஜீவா. பேச்சுக்கும் செயலுக்கும் வேறுபாடில்லாத இந்த வாழ்வு 1963 ஜனவரி 18ந் திகதி 'மாரடைப்பு' என்ற காலனின் கட்டளையுடன் முடிவடைந்தது - அல்ல நிறைவடைந்து நிற்கிறது. இறுதியாக தன் நண்பனான முதல்வர் காமராஜரைக் காணவிழைந்தார் ஜீவா. "அவருக்குச் செய்தி சொல்லுங்கள்" என்பதுதான் இறுதியான வார்த்தையாக இருந்தது.

1963 'தாமரை' இவருக்கான சிறப்பு இதழை வெளியிட்டது. அந்த இதழில் சுந்தரஇராமசாமி அவர்கள் இப்படி எழுதுகிறார்!

"பேச்சுக்கலை ஜீவாவின் காலடியில் வீழ்ந்து கிடந்தது
இப்போது மேடையில் ஒரு நாற்காலி காலியாகி
விட்டது; என்றும் காலியாகவே இருக்கும்"


ஜீவாவின் மறைவின்பின் தமிழ்நாட்டில் பொதுவுடமைக்கட்சி பல பின்னடைவுக ளைக் கண்டது. 'நவசக்தி' பத்திரிகை தற்போது இவரது அடிப்பொடியான தா.பாண்டியன் அவர்களால் நடத்தப்படுகிறது. இவரது மறைவின் பின் நன்றிமறவாத தொழிலாளர்கள் சென்னை துறைமுகத்துள் இவரது சிலையொன்றை நிறுவ முனைந்தனர். அவர்களின் பொருளாதார நிலையால் அது தடைப்பட்டபோது, மறைந்த மக்கள் திலகம் எம்.ஜீ.ஆர். அவர்களால் அந்த ஆசை நிறைவேற்றப்பட்டது.

"தான் சொந்தக் குடியை உயர்த்தும்பொருட்டு காரியம் ஆற்றத் தொடங்கிய ஒருவன் அதனை முடிக்கும்வரை அந்த முயற்சியைக் கைவிடேன் என்று உழைக்கும் பெருமையைவிட அவனுக்கு மேன்மை தருவது பிறிதொன்றில்லை" என்று வள்ளுவம் சொல்லுகிறது. ஜீவாவை இந்தக் குறளில் பார்ப்போம்!

"கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்"

('குடிசெயல்வகை' - குறள் 1021)

குறுங்கதை



# அலுப்பு

-வேல் அமுதன்-

**சொ**ன்னபடி *Cultural Officer* கனகரத்தினம் சரியாக மாலை ஐந்து மணிக்கு எமது திருமண ஆலோச னையகத்திற்கு வந்துவிட்டார். ஆனால் ஆறுமுக வாத்தியார் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப் படிவத்தோடு தந் திருக்க வேண்டிய தனது மகள் நந்தி னியின் புகைப் படங்களை "பொருத்தம் பார்த்து, சாதகங்கள் பொருந்தியுள்ளன, மாப்பிள்ளை பகுதி படம் பார்க்க இன்று ஐந்து மணிக்கு வருவார்கள்" என நான் பல முறை சொல்லியும்கூட ஐந்தரை மணியளவிற் படங்களை அனுப்பி வைத்தார்.

நந்தினியின் புகைப்படங்களைப் பார்வையிட்ட மணமகன் கனகரத் தினம், "பிள்ளையைப் பிடித்திருக்குத்தானே?" என நயமாகச் சொல்லியதற்கு, "யோசித்துச் சொல்றன்" எனச் சொல்லி விடைபெற்றுப் போனவர் போனது தான்! இன்றுவரை பேச்சு மூச்சு இல்லை!

இன்றைய தினம் "சாதகம் பார்த்தாச்சு - படம் பார்த்தாச்சு இனி சீதனத் தைப் பேசலாமா?" என நான் கனகரத்தினத்தைக் கேட்டபோது, "இந்தப் *Proposal* எனக்குச் சரிவராது. வேறை ஒன்றை நல்லதாகப் பார்த்துத் தாங்கோ" என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது!

ஆறுமுக வாத்தியார் குடும்பம் ஒரு சோலி இல்லாத குடும்பம். அப்படியிருக்க, மறுக்கப்பட்டதன் மர்மத்தை அறிய ஆராய்ந்தேன்.

மறுப்பின் இரகசியம் ஆறுமுக வாத்தியாரின் சுபாவம் என விளங்கிக் கொண்டேன்.

வாத்தியார் எதற்கும் எப்பவும் அலுப்பு. கலியாணம் சரிவருமெனத் தெரிந்தும், மகளின் புகைப்படங்களை ஏனோதானோவென, அங்கம் தெரியும் - அடக்கத்தை வெளிக்காட்டாத - *Fashion Modeling* பாணியில் - மகள் ஆசைக்கு எடுப்பித்த படங்களை - பார்த்தும் பாராததுமாக அனுப்பி தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டார்.

அதேவேளை, ஆறுமுக வாத்தியார் தான் படிப்பிக்கும் பாடசாலை யில் "அலுப்பு வாத்தியார்" என மாணவர்களால் பட்டம் சூட்டப்பட்டதன் காரணமும் எனக்குத் தெளிவானது.



# ஊர் கூடித் தேரிழுத்தால்

விலங்கினச் சாலையிலே
விலங்கிட்ட விலங்கா நாம்?
உலகிற்கே பார்வையிட
இங்கென்ன கடையா நாம்?
இலவுகாக் கிளிபோல
இழந்ததே பெருந்தொகையாம்
அலையுதே எம்மினம்
ஆறுதல் யார் தருவாராம்?

அத்தனையும் தாங்கிநிதம்
அகதிகளாய்க் காவலுடன்
இத்தரையில் வாடுகிறோம்
எங்கெமைக் காக்கவென்று
அக்கரையில் அக்கறையாய்
அம்புபோல் வந்தேகி
வக்கணையாய் வாய்பேசி
வறிவிட்டார் நாடேகி

சேர்த்தணைக்க அண்ணனுண்டு,
சீறிவிழத் தம்பியுண்டு,
பார்த்திருக்கப் படையுமுண்டு
பாசமுடன் தலைவனுண்டு,
ஆர்ப்பரிக்கும் செந்தமிழில்
அழகழகாய்க் கவிதையுண்டு,
போர்நெரித்த வேளைதன்னில்
பின்புலத்தே கதையுமுண்டு,

அரோகரா போட்டவர்கள்
அக்கினியை மிதித்ததில்லை,
அதுபோல இங்குபலர்
ஆர்ப்பரிப்பார் மிதிப்பதில்லை,
யார்யாரோ வந்தாலும்
எம்கையே எமக்குதவி
ஊர்கூடித் தேரிழுத்தால்
அசையாதோ வான்பரிதி!

சிவா. பத்மநாதன்

# சொல்வளம் பெருக்குவோம் (13)

– பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம் –

**பெயர்ச்சொல் வினைச்சொல்** என்ற பாகுபாட்டை எல்லா மொழிகளிலும் காணலாம். எனவே, இப்பாகுபாடு இயற்கையானது. இவற்றுள் எது முதலில் தோன்றியது எனக் கூறமுடியாது. ஒரு பொருளின் **அசையாநிலை, அசையும் நிலை** என இரு நிலைகள் உள. ஒரு பொருளின் அசையாநிலையில் அதன் பெயரைச் சுட்டுகின்றோம். அசையும் நிலையில் அதன் செயலைச் சுட்டுகின்றோம்.

**செயல்** (வினை) என்பது பொருளின் அடையாக, பண்பாக வரும். செயல் என்றால் என்ன? ஒரு பொருள் என்ன செய்கிறதோ அல்லது நிகழ்த்துகிறதோ அதையே **செயல்** என்கின்றோம். மொழியில் பொருளின் பண்புக்கும் செயலுக்கும் அவ்வளவாக வேறுபாடில்லை. இது பற்றியே தமிழ் இலக்கணத்தில் **குணம், தொழில்** என்னும் இரண்டு பண்பு எனக் கூறப்படுகிறது. ஒரு வாக்கியம் ஒரு பொருளைப் பற்றியோ, அதன் தன்மையைப் பற்றியோ, செயலைப் பற்றியோ விளக்குவதாகவே அமைகிறது.

சில மொழிகளில் பெயருக்கும் வினைக்கும் தெளிவான வேறுபாடு இல்லை. தமிழில் பல அடிச்சொற்களை ஆராய்ந்தல், அவை பெயருக்கும் வினைக்கும் பொதுவாக உள்ளமையைக் காணலாம்.

உதாரணமாக, **பூ, மலர், பிடி, அடி, தளிர், தழை, காய்** முதலியனவற்றைக் குறிப்பிடலாம்.

**பூவென்பது,** பொருளின் அசையாத நிலையில் மலரைக் குறிக்கும் பெயராகும்.

பூவென்று ஏவும்போது – அசையும் நிலையில் வினையாகும்.

வினைமுற்றுக்கூட வினையாலணையும் பெயராக அமைகிறது.

**வந்தவன், போனவன், சிரித்தவன், படித்தவன்** என்பன வினையால் அணையும் பெயர்களாம்.

பல சொற்கள் தொடக்கத்தில் ஏவும் சொல்லாகிய ஏவல் வினையாகவே பயன்பட்டிருத்தல் வேண்டும்.

**அம்மா** என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் அது தாயைக் குறிக்கும். பெயர்ச்சொல் என்று குறிப்பிடுவோம்.

ஆனால், குழந்தையின் வாயில் பிறக்கும்போது அதற்குத் '**தாய்**' என்ற பொருள் இல்லை. குழந்தையின் தேவையை – வேட்கையை உணர்த்தும் ஒலியாகவே அது பயன்படுகிறது.



எதிரிலுள்ளவரை நோக்கித் தன் தேவையை தருமாறு ஏவுகிறது. பல மாதங்கள் வரை தனக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் '**அம்மா**' என்றே அழைக்கின்றது.

அம்மாவென்பது தன் தாயின் பெயர் என்பதைக் குழந்தை அறிந்துகொள்ளப் பல மாதங்கள் செல்லும்.

இதனைப் போன்றே மலர், காய், தழை முதலிய சொற்களைப் பழங்கால மனிதர் ஏவல் வினைகளாகப் பயன்படுத்தினர். தமிழிலே காணும் பகுதியோ அடிச்சொல்லோ ஏவல் வினையாகவே அமைகின்றது. வா, போ, பேசு என்றன போன்ற அடிச்சொற்களெல்லாம் ஏவல் வினையே.

இனி, வந்தான் என்ற வினைச்சொல்லின் அடிச்சொல் 'வா' என்பதாகும். உணவு என்ற பெயர்ச்சொல்லின் அடிச்சொல் '**உண்**' என்பதாகும்.

ஈண்டும்
வா, உண் என்ற அடிச்சொற்கள் ஏவல் வினையே.
உணவு முதலிய சொற்களைத் தனிவாக்கியமாக வழங்குதல் இயலாது. ஆனால், உண் முதலிய ஏவல் வினைகளைத் தனிவாக்கியமாக வழங்க முடியும்.

தமிழிலே பகுதியின் பகுதியாகிய வேர் இலக்கணத்துள் நன்கு ஆயப்படவில்லை என்பாருமுளர்.

விரி என்னும் பகுதியின் பகுதியை 'விர்' என்பர். அதனோடு அல் என்ற தொழிற்பெயர் விகுதியைச் சேருங்கள். விர் + அல் விரல் என்ற சொல்லிற்கும் அது கைவிரலுக்கு தொழிலாகு பெயராய் அமையும்.

**கடல்** என்ற சொல்லின் பகுதி '**கட**' அது '**கட்**' என்பதன் அடியாகப் பிறந்தது. அது கடத்தற்குரியது; கடக்க ஒண்ணாதது என்ற இரு பொருளும் தரும்.

**நாக்கு** என்பது **நக்கு** என்பதன் அடியாகப் பிறந்தது. **நக்குப்பிராணி நாய்** எனப்பட்டது. சொல்வளம் பெருக்கற்கு பகுதி – அடிச்சொல் ஆய்வும் வேண்டும். இன்றேல் பிழையான முறையில் கருத்துக் கொள்ள நேரும். பிரபல அறிஞர் ஒருவர் வேதம் என்பதன் அடியும் வேய்தல் என்பதன் அடியும் 'வே' என விளக்கினார். 'வே' 'மூடு' என்ற பொருள் தரும். எனவே வேதம் தமிழ் மொழியென்றார். உண்மையில் வேதத்தின் அடி **வித் என்பதாகும்.**

வேய்தல் என்பதன் அடி **வேய் ஆகும்.** அடிச்சொல் பற்றிய சரியான அறிவு இன்றேல் இத்தகைய விபரீதங்கள் நிகழும்.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
WRITERS MOTIVATION CENTRE

ஓ.கே.குணநாதன் MA, MSc, MPhil
K.Kunanaadan MA, MSc, MPhil

இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை. தொலைபேசி : 065-2226658, 0776041503
No. 64, Kathirkamar Road, Amirthakali, Batticaloa, Sri Lanka, Phone : 0652226658, 0776041503, e-mail : okkuna@gmail.com

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
வழங்கும்

# தமிழியல் விருது 2010

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டுதோறும் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழியல் வித்தகர் பட்டமும் தமிழியல் விருதும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

இவ்வாண்டும் ஐப்பசி மாதத்தில் இவ் விருதுகளை வழங்குவதற்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் செயல்வடிவம் கொண்டுள்ளது.

## உயர் தமிழியல் விருது

இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும்.

## தமிழியல் விருதும் தமிழியல் வித்தகர் பட்டமும்

தமிழிலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் 5 பேருக்கு தமிழியல் வித்தகர் பட்டத்துடன் தலா ரூபா 15,000 பொற்கிழியும் வவுனியூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா - கமலநாயகி தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

## சிறந்த நூல்களுக்கான தமிழியல் விருது

2009ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 13 நூல்களுக்கு தலா ரூபா 10,000 பொற்கிழியுடன்,

சுவாமி விபுலானந்த அடிகள் தமிழியல் விருது
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழியல் விருது
புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் தமிழியல் விருது
கல்விமான் க.முத்துலிங்கம் தமிழியல் விருது
புரவலர் நளீம் ஹாஜியார் தமிழியல் விருது
சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி தமிழியல் விருது
நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருது
கலைஞர் ஓ.கே.கணபதிப்பிள்ளை தமிழியல் விருது
பம்பைமடு நாகலிங்கம் தமிழியல் விருது
வணபிதா சந்திரா அடிகளார் தமிழியல் விருது
வித்தியாகீர்த்தி ந.சந்திரகுமார் தமிழியல் விருது
செந்தமிழ்ச்செல்வர் சு.ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருது
கலாநிதி சந்திரமோகன் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்

Writer - Freelance Journalist
Director - Writers Motivation Centre
Assistant Director - Madurai Kamaraj University, Sri Lanka Centre
District Youth Service Officer - National Youth Services Council, Batticaloa



## குறுந்திரைப்படத்திற்கான தமிழியல் விருது

2009ம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 3 குறுந்திரைப்படங்களுக்கு தலா ரூபா 10,000 பொற்கிழியுடன்

டாக்டர் பூபாலரெட்ணம் தமிழியல் விருது
கவிஞர் கல்லாறன் தமிழியல் விருது
துறையூர் வே.நாகேந்திரன் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்

## சிறப்புத் தமிழியல் விருது

மிகச் சிறந்த வெளியீட்டகம் / பதிப்பகம், நூல்வடிவமைப்பு / அட்டை வடிவமைப்புக்கு தலா ரூபா 5,000 பொற்கிழியுடன்

புரவலர் ந.ஜெகதீசன் தமிழியல் விருது
புரவலர் எஸ்.சோலைமலைத்தேவர் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

## ஓவியருக்கான தமிழியல் விருது

மிகச் சிறந்த ஓவியர் ஒருவருக்குத் தலா ரூபா 5,000 பொற்கிழியுடன் ஓவியர் கிக்கோ தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும்.

அந்த வகையில் 2010ஆம் ஆண்டு தமிழியல் விருதுக்கான நூல்களையும் குறுந் திரைப்படங்களையும் தேர்வு செய்ய படைப்பாளிகளிடமிருந்து நூல்களையும் இறுவட்டுக்களையும் எதிர்பார்க்கிறது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையைத் தாயகமாகக் கொண்ட படைப்பாளிகள் 2009ஆம் ஆண்டு தை 1ஆம் திகதி முதல் மார்கழி 31ஆம் திகதிவரை வெளிவந்த நூல்களையும் குறுந்திரைப்பட இறுவட்டுக்களையும் தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, இன மத நல்லுறவு இலக்கியம், தொழில்நுட்பம் எனப் பல்துறை சார்ந்த நூல்களையும், 30 நிமிடங்களுக்கு உட்பட்ட பல்துறை சார்ந்த குறுந்திரைப்பட இறுவட்டுக்களையும் தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

தேர்வுக்காக வந்து சேரும் நூல்களில் இருந்து 2009இல் வெளிவந்த சிறந்த 13 நூல்களும், இறுவட்டுக்களில் இருந்து 3 சிறந்த குறுந் திரைப்படங்களும் நீதியானதும் சுதந்திரமானதுமான துறைசார் நடுவர் குழுவினால் தமிழியல் விருது 2010க்காக தேர்வு செய்யப்படும்.

தேர்வுக்காக பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விபரப் பட்டியலுடன் நூலாயின் 4 பிரதிகளும் இறுவட்டாயின் 2 பிரதிகளும் 10.8.2010க்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

ஒரு படைப்பாளி எத்தனை வகையான படைப்புக்களையும் அனுப்பி வைக்கலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி
ஓ.கே.குணநாதன்,
மேலாளர்,
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்,
இல. 64, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை.
தொலைபேசி இலக்கம் : 0776041503

# நீர் பற்றிய பண்பாட்டுவியாக்கியானம் : ஒரு மானுடவியல் நோக்கு

## Cultural Interpretation of Water:

### *A Social Anthropological Perspective*

சண்.பத்மநேசன் *B.A(Hons), M.A*
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

**அறிமுகம்:**

பல்துறைகளோடு முகிழும் இன்றைய அறிவியற்புலத்தில், சாதாரணமாக புவியிலுள்ள நீருடன் தம் ஆய்வுகளை செப்பனிடும் நீர்ப்பாசனவியலாளர்கள், விவசாயவியலாளர்கள், விஞ்ஞானவியலாளர்கள், புவிச்சரிதவியலாளர்கள், புவியியலாளர்களுக்கு அப்பால் சமூகமானுடவியலாளர்களும் மக்களின் வாழ்வோடு ஒன்றாய் பிணைந்துள்ள நீர் பற்றிய சமூக, பண்பாட்டு வியாக்கியானங்களை கையளிக்கவேண்டியிருப்பதால் இக்கட்டுரையாக்கமும் அவசியமாயிற்று. இக்கட்டுரையானது, நீர்பற்றிய ஓர் அறிமுகம், நீரின் தொழிற்பாடுகள், சமய, மெய்யியல் சார் அணுகுமுறை கருவளவிருத்தியின் குறியீடாய் உருவகப்படுத்தல், இடமாற்றத்தின் குறியீடு, புனிதப்பொருளாக உருவகப்படுத்தல் போன்ற உப பகுதிகளை உள்ளடக்கி ஆய்வுசெய்கின்றது.

**நீர் பற்றிய ஒரு அறிமுகம்**

புவியில் 29% நீர்ப்பகுதி, அவற்றில் 0.007% நீர்வளம் மட்டுமே மனித நுகர்விற்கு பாத்திரமுடையது. மனித வாழ்வின் அடிப்படை ஆதாரங்களுள் ஒன்றாய் அதன் தொழிற்பாட்டில் பல தேவைகளுக்காய் உணரப்படும் நீரும் மக்கட்தொகை அதிகரிப்புடன் அண்மைக் காலங்களில் கோரிக்கைப் பொருளாகி ஒருபுறம் எழுச்சிபெற, மறுபுறம் நீர் மாசுபடுதலைத் தடுக்க தீட்டும் திட்டங்களும் தட்ப - வெப்ப, நில அமைவுத் தன்மைகளுக்கமைய நீரின் தன்மைகளில் நிகழும் மாற்றங்களுக்கான ஆய்வுகளும் மேம்பாடடைய, இன்னோர் புறத்தில் மனித வாழ்வாதாரத்தில் விவசாயத்திற்கு மூலாதாரமாய் விளங்கிட, சமூகவியற்புலத்தில் அண்மைக்காலங்களில் உதயமான சூழலியற் சமூகவியலும் *(Environmental Sociology)* தன் அணுகுமுறைகளுடனான பங்களிப்பை செவ்வனே செய்கின்றது.

அந்த வகையில் தென்னாசியப் புலங்களில் இன்று நீரானது அரிதான பொருளாய் பார்வையிடும் மற்றும் மனிதவாழ்வின் பண்பாட்டு வியாக்கியானங்களை சுமந்து சமூக மரபுவழிசார் கையளிப்பாக (Social heritage) தொடர்வது சமூக மானுடவியலாளர்களை அதன்பால் ஈர்க்கவும் செய்கின்றது.



**நீரின் தொழிற்பாடுகள்**

அமைப்பியல், செயற்பாட்டில் அணுகுமுறைகளூடாக ஆய்வுசெய்யப்படும் **'தூய்மைப்படுத்தல்'** *(Purification)*, **'வளப்படுத்தல்'**, **'வாழ்வாதாரத்திற்கு அடிநாதம்'** போன்றன முக்கியம் பெறும் தொழிற்பாடுகளாம். இவை அனைத்தும் மனித வாழ்வியலில் அடிப்படையானது. வளப்படுத்தல் விவசாயத்தோடு தொடர்புடையது. இலங்கையின் நீர் வளநாகரிகம், "...நீர் உயர நெல் உயரும்..." போன்றன நீரின் வளப்படுத்தல் சிறப்பை உணர்த்தும். இது இயற்கையின் நிமித்தம் அத்தியாவசியப் பொருளாயினும் பண்பாட்டு ரீதியாக எங்ஙனம் உருப்பெறுவது என்பது ஆய்வு செய்யப்படவேண்டியது. விவசாயத்திற்கு நீர் மூலாதாரமாய் இருந்தபோதும் எந்த நீர்? யாருக்குடையது? போன்றன சமூக ரீதியாக கட்டுமானம்பெறுவது சாதிய அடிப்படையிலும், குறிப்பிட்ட உறவுமுறை *(Kinship System)*, கால்வழியினருக்கு *(Leneage)* மரபுவழி உரிமையாய் அமையும் நீர்ப்பங்கு இதனை சாதாரண பொருளுக்கு அப்பால் எங்ஙனம் சமூகப்பெறுமதி அடைவதைக் குறிக்கும். உதாரணமாக யாழ்ப்பாண சமூகத்தில் தோட்டங்களிலும், கிராமக் குடியிருப் புகளில் அமைவுறும் கிணறுகளும் அதன்மீதான ஆட்சி, உரிமைபாராட்டுதல் என்பது சாதிய, உறவுமுறை, கால்வழிவாயிலாக பெறப்படுவது. இதனால் ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு பெறப்படு பொருளையும், மற்றையோருக்கு பெறப்படாத, அரிதான பொருளாயும் அமைந்து அசமத்துவ நிலையினையும் *(Ineauality)* புறக்கணிப்பையும் *(Discrimination)* உணர்த்தும்.

அடுத்து நோக்கவேண்டியது 'தூய்மைப்படுத்தல்' பற்றியது. தொட்டுணரும் மாசினையும், தொட்டுணரமுடியாத மாசினையும் அகற்றும் ஓர் தூய்மைப்படுத்தியாக உருவகம் கொள்ளப்படும் நீரும் சில சமயங்களில் தொட்டுணரமுடியாத மாசினால் கட்டுண்டு 'விலக்கு பொருளாக' கொள்ளும் பண்பாடுகளும் உண்டு இவைபற்றி விரிவாக பின்னர்வரும் பகுதிகளில் ஆழமாக விவரிக்கப்படும்.

மனித உடலை தூய்மைப்படுத்தல் எனும் நிகழ்வு மனித வாழ்வின் வாழ்க்கைவட்ட நிகழ்வுகளோடு இணைந்து பெறும் சமூகப்பெறுமதியினை நோக்குதல் அவசியம். பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், மரணம் ஆகிய முக்கிய வாழ்க்கை வட்ட நிகழ்வுகளில் முக்கிய பதிவினைப் பெறும். பிறப்பாயினும், பூப்பெய்தலாயினும், திருமணமாயினும், மரணமாயினும் மனித உடல் நீரால் தூய்மைப்படுத்தப்படல் வழமை. இது ஒரு பண்பாட்டு நிகழ்வு. அதாவது இவை பண்பாட்டில் அர்த்தம் காணவிழைவதும் கவனத்திற்குரியதே. தமிழர் பண்பாட்டில் குழந்தை பிறந்ததும் நீரால் சுத்தம் செய்யப்படுவது வழமை. ஆனால் அதுவே 'நாளுக்குக் குளிக்க வார்த்தல் அல்லது தோய வார்த்தல்' எனும் சொற்றொடர் அதன் பண்பாட்டு அழுத்தத்தை உணரவைக்

கும். அதற்கென்று வளர்பிறைநாள் (எந்தசெயலாயினும் வளர்பிறை தினங்களில் ஆரம்பிக்கும் மரபு) மரணயோகம் அல்லாத நாள், அட்டமி, நவமி அல்லாத நாள் போன்றவற்றையே தேர்ந்தெடுப்பர் "வாழும் வளரும் பிள்ளை நல்ல நாளில் தோயவார்க்க வேண்டும்" எனும் யாழ்ப்பாணத்து தமிழ் மக்களின் சொற்றொடரும் அதன் மரபுவழி வழக்கத்தை எடுத்தியம்பும். நீராட்டல் என்பது ஒரு சாதரண பொது நிகழ்வாயினும் அது பண்பாட்டில் பெறும் முக்கியத்துவம் ஆய்ந்துநோக்கவேண்டியதொன்றே. இயற்கையோடு ஒன்றித்த வாழ்வுடன் மனித வாழ்வு அரும்பம் கண்டது என்பது இயற்கையோடு கீழ்ப்படிந்து அதனுடன் ஒன்றிணைந்து செல்லும் பண்புகளுடன் ஆதி சமூகங்கள் இருந்தன என்பதற்கும் ஓர் எடுத்துக்காட்டு.

பூப்பெய்தல் நிகழ்வினை நோக்கின் பூப்பெய்திய/பருவமெய்திய பெண்ணுக்கு நிகழும் பூப்புனித நீராட்டுவிழா மூலம் புனிதமடைதல் போன்றவற்றிற்கு அப்பால் பூப்பெய்தல் நிகழ்வோடு இணைந்துள்ள துடக்கும் *(Pollution)* தூய்மை *(Purity)* பெற நீர் முக்கியமூலப்பொருளாகிறது. எனவே நீரானது சில சமயங்களில் புனிதப்பொருளாக்கப்படல் குறிப்பிடத்தக்கது. இதுபற்றி பின்னர் விரிவாக உரைப்போம். வீட்டின் துடக்கு முதல் மனித உடல் வரை பண்பாட்டுத்தளத்தில் அர்த்தம் காண விளைவது கவனத்திற்குரியதே. தமிழகத்தில் மஞ்சள் நீராட்டுவிழா மூலம் பூப்பெய்தல் சிறப்புக்கொள்ளும். இது மட்டுமன்றி இம் மஞ்சள் நீரானது சந்தோஷத்தை/மகிழ்ச்சியை தெரிவிக்கவும் உதவும் எடுத்துக்காட்டாக சித்திரை வருடப்பிறப்பை அண்மித்த தினங்களில் மதுரையில் உள்ள கிராமங்களில் திருமணமாகாத கன்னிப் பெண்கள் தாம் மணம் செய்ய இருக்கும் காதலனுக்காயினும் சரி, முறை மாப்பிள்ளையாயினும் சரி அவர்களைத் துரத்தி மஞ்சள் நீரால் நீராட்டும் குதூகல சம்பவம் உணர்த்துவது கேலி உறவு நடத்தையினையே *(Joking Relationship)* இது உறவுமுறை நடத்தையின் *(Kinship Behavior)* ஓர் அங்கம். இது பல வடிவங்களில் ஒவ்வொரு பண்பாட்டிலும் நிகழ்வது. இங்கு இவ் நடத்தை மஞ்சள் நீராட்டுமூலம் 'மகிழ்ச்சி' 'அவளுக்கான உரிமை' 'பண்பாட்டு வழக்கம்' முதலியன உணர்த்தப்படும். பொதுவாக நீராட்டுதல் என்பது குளிர்ச்சியைக் குறிக்கும். இதுபற்றி பரவலாக பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளன. மேலும் யாழ்ப்பாண சமூகத்தில் பூப்பெய்திய தினத்தில் நிகழும் 'கண்ட தண்ணி வார்த்தல்' எனும நிகழ்வு எங்ஙனம் ஓர் பண்பாட்டுச் சடங்காக்கப்படுவது ஈண்டு குறிப்பிடப்படவேண்டியது. ருதுவான தினத்தன்று உடனே இது நிகழ்வது.

திருமணச் சடங்கிலும் 'மங்கல நீராடல்' , 'புனித நீராடல்' முக்கிய பதிவினைப் பெறும். மணமகன், மணமகள் புனித நீராடல் மூலம் தூய்மைப் படுத்தப்படுகின்றனர். இங்கு தமிழர் திருமணச் சடங்கை மையம் கொண்டே



கட்டுரை நகர்த்தப்படுகின்றது. சாதாரணமாக மனித வாழ்வின் ஓர் அங்கமான 'குளித்தல் செயற்பாடு இத் தினங்களில் உறவுகளோடிணைந்து, சமய, பண்பாட்டு, சமூக பெறுமதி அடைவது. யாழ்ப்பாணத்து புலங்களில் 'தலைக்கு தண்ணி வார்த்தல்' எனும் சொற்றொடரால் அழைக்கப்படுவது. அடுத்து மரணச் சடங்கை நோக்கின் அங்கு மந்திரிக்கப்பட்ட கும்ப நீரினால் பூதவுடல் தூய்மைப்படுத்தப்படுதல் வழமை.

## நீர் புனிதப்பொருளாக கருதப்படல்

இந்துதர்ம கொள்கையின் பிரகாரம், நீரானது பஞ்சபூதங்களில் ஒன்றாக 'அப்பு' என்னும் பெயரால் சுட்டப்படும். நீரானது ஒரு புனிதப்பொருளாக பல பண்பாடுகளில் கொள்ளப்படுகின்றது. நீரானது பிற மாசுக்களை அகற்றும், சுத்தமாக்கும் ஒரு பொருளாகக் கொள்ளப்படல் இங்கே மாசு *(Pollution)* என்பது தொட்டுணரக்கூடிய, பௌதீகம் சார்ந்ததைக் குறிக்கும் அதே சந்தர்ப்பத்தில் தொட்டுணரமுடியாத துடக்கு *(Impurity)* அல்லது தீட்டு என்பவற்றையும் குறிக்கும். இந்துக்களது வாழ்வில் நிகழும் பிறப்பு (குழந்தைப்பேற்று நிகழ்வு), பூப்பெய்தல், மரணம் முதலியவற்றால் தருவிக்கப்படும் துடக்கானது நீரின் உதவியோடு அகற்றப்படும். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் சாதாரண நீரானது பிராமணரது மந்திர உச்சாடனங்களினால் 'புண்ணியாபிஷேக நீர்' எனும் பெயரால் புதுவடிவம் பெறுவது. இப்புண்ணிய நீரினால் பிற குற்றங்கள், துடக்கு போன்றவற்றால் மாசுற்ற மனித உடல், பௌதீகம் சார்ந்த விடயங்கள் (வீடு, வளவு, உடை, உபகரணப் பொருட்கள் மற்றும் பல) தூய்மை அடைவது என்பது மக்களது நம்பிக்கை. ஆனால் அதே நேரம் யாழ்ப்பாண மக்களிடையே நிலவும் இன்னோர் வழக்கம் யாதெனில் மரண நிகழ்வால் அவ்வீட்டு கிணற்றுநீரும் துடக்கு நீராகி இல்லத்தவர்களுக்கும், இரத்த வழி உறவினர்களுக்குமன்றி பிறருக்கு வேண்டாப் பொருளாக/விலக்குப் பொருளாக துடக்குநீக்கும் சடங்குவரை கொள்ளப்படும். பிராமணியத்தினூடாக மேற்கிளம்பும் இத்தூய்மை / துடக்கு இங்கு ஆழ்ந்து நோக்க வேண்டியது. அதாவது பிராமணரது மந்திர உச்சாடனங்களின் உதவியுடன் தயாரான புண்ணியாபிஷேக நீருடனான அர்ப்பணிப்புடன் முதலில் கிணற்றுநீர்த் துடக்கு அகற்றும் சடங்கு யாழ்ப்பாண மக்களிடையே நிலவும் அபர கிரியைகளில் ஒன்றாகவுள்ளது. எனவே நீரின் கொள்ளளவால் *(Quantity)* சுத்தம் செய்தலுக்கு அப்பால் நீரின் பண்பளவால் / தன்மையளவால் *(Quality)* அந்தஸ்தடைவது முக்கியம் பெறும்.

மேலும் இதுபோன்றே இந்துக்கோயில்களில் இறை உருவங்களுக்கு நீராட்டப்படும் நீர் புனிதநீராகி 'தீர்த்தம்' என்ற சொற்றொடரால் யாழ்ப்பாணத்துப் புலங்களிலும், தமிழகத்தில் 'பிரசாதம்' எனும் சொல்லாலும் குறிப்பர். இதற்கு அப்பால் ஆலயங்களோடு இணைந்த குளம், கிணறு,

கேணி முதலியவற்றில் உள்ள நீர் 'புண்ணியதீர்த்தமாகவே' கொள்ளப்படும். இந்துக்கோயில்களில் மட்டுமன்றி நாகபட்டிணத்தில் வேளாங்கன்னியில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் வழங்கப்படும் புனித நீரும் 'புண்ணிய தீர்த்தமாகவே' கொள்ளப்படும். பிரான்சில் உள்ள லூட்ஸ் மாதா கோயிலில் வழங்கப்படும் புனித நீரும் அவ்வாறே. இப்புண்ணிய தீர்த்தமானது நோய் தீர்க்கும் மருந்து என்றே இந்துக்கள் நம்புகின்றனர் அவ்வாறே பிற பண்பாட்டினரும்.

### மழையை உருவாக்கும் அரசர் கடவுளே

உலக பண்பாடுகள் பலவற்றில் இது பொருத்தமாக அமையும். மனித வாழ்வாதாரத்தில் ஒன்றான விவசாயத்திற்கு ஆதாரமான நீரினை மழை மூலம் நிறைவேற்றிக்கொள்ள பல சடங்குகள், மரபுவழிசார் வழக்கங்களை மனிதன் தன் நம்பிக்கைத்தளத்தின் மேல் கட்டியெழுப்புவது பல பண்பாடுகளில் எழுச்சி காணும் பண்புகளாய் அமையும். இலங்கைச் சமூகத்தில் சிங்கள மக்கள் மழைவேண்டி அனுராதபுர மாவட்ட பிரதேசங்களில் போதி (அரசமரம்) மரத்திற்கு ஆற்றும் சடங்குகளும், மற்றும் தமிழ் மக்களால் ஆற்றப்படும் 'கொடும்பாவி' எரித்து மழை வேண்டிச் செய்யும் மரபுகளும் இதன் வலிமையை உணரச்செய்யும். மற்றும் வேத கால பாடல்களில் மழையின் தெய்வமாக வருணன் போற்றப்படுதலும், சங்க காலத்தில் நிலவிய ஐவகை நிலங்களில் ஒன்றான நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடம்) நிலத்தின் கடவுளாக வருணன் கொள்ளப்பட்டதும், மழை வேண்டி இந்திரனுக்கு ஆற்றிய யாகங்கள் இவை அனைத்தும் உணர்த்துவது எங்ஙனம் நீரெனும் இயற்கை வளம் கடவுள் நிலையில் வைத்து எண்ணத்துணிதல் என்பது அவ் இயற்கையின் பால் மனிதனுக்கிருந்த தேவை, தங்கியிருத்தல் போன்றவற்றை உறுதிசெய்கின்றது. ஆதிகால மனித வரலாற்றில் இருந்து இன்றைவரை இந் நம்பிக்கைகள் தொடரும் கொள்கைகளே. மேலும் அவுஸ்ரலிய பழங்குடி மக்களும் மழைவேண்டி ஒன்றாக தொடர்ந்து நடனத்தில் ஈடுபடுபவர் இதன் ஈற்றில் மழைவரும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். மழையை உருவாக்குபவர் தெய்வமாகக் கொள்ளும் நிலமையை உணரக்கூடியதாக இருக்கும்.

### கருவள விருத்தியின் குறியீடாய்

கருவள விருத்தியின் குறியீடாய் நீர் உருவகம் கொள்ளப்படுகின்றது. இலங்கையில் சிங்கள சமூகத்தில் கிராமப்புறங்களில் புதிதாய் மணஞ்செய்துவரும் பெண்ணானவள் அவ்வில்லத்திலே நீர் எடுத்துவர அனுப்புதல்



வழமை. அதுவே அப்பெண்ணுக்கு முதன் முதலில் வழங்கப்படும் வேலை ஆகும். சிங்களச் சமூகத்தின் விழுமிய முறையாய் இது அமையும்.

### இடமாற்றத்தின் குறியீடாய்

பொருள் அல்லது ஏதாயினும் ஒன்றை இடமாற்றம் செய்ய நீர் குறியீடாய் பிரயோகம் செய்யும் வழக்கம் சில பண்பாடுகளில் வழமையான செயல் சிங்கள திருமண வைபவத்தில் ஆணையும் பெண்ணையும் இணைக்கும் சந்தர்ப்பத்தில் நீர் ஊற்றுதல், மேலும் தமிழர் திருமண நடைமுறைகளுள் ஒன்றான கன்னிகாதானம் நிகழும் பட்சத்தில் நீர் மூலமே மணமகளை தாரை வார்த்து மணமகனுக்கு வழங்கும் செயல் உணர்த்துவதும் இவ் இடமாற்றக் குறியீட்டையே.

### பெண் தெய்வங்களாய்

நீரானது பெண் தெய்வங்களாக உருவகித்தல் பல பண்பாடுகளில் உண்டு. குறிப்பாக ஆறு, குளம், அருவி, நதி என்பன பெண் தெய்வங்களாகவும், பெண்ணின் பெயர்களோடு இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சிவபெருமானின் தலையிலமர்ந்துள்ள கங்காதேவி (பெண் தெய்வம்) அவளே வாரனாசியில் பாய்ந்தோடுகின்றாள் என்பது புராணங்களும், இதிகாசங்களும் கூறும் செய்தி. இதற்கு அப்பால் சப்த நதிகள் மிகவும் புண்ணிய நதிகளாக கொள்ளப்படுகின்றது. காவேரி, கோதாவரி, கிருஷ்ணா, கங்கை, யமுனா, சரஸ்வதி போன்றவை குறிப்பிடத்தக்கது.

இங்கே கூறப்பட்ட புண்ணிய நதிகளில் கங்கை முக்கியம் பெறும். காசிக்குச் சென்றால் 'முத்தி' என்ற சீரிய வாசகமும் இதன் சமூகப் பெறுமதியை உணர்த்தும். உதாரணமாக கங்கை நீர் உள்ளடக்கப்பட்ட செப்பிலாலான செம்பானது இந்தியா, இலங்கை மற்றும் இந்துக்கள் வாழும் மேற்குலக நாடுகளிலும் பூஜை அறையில் வைத்து வழிபாடாற்றும் மரபு இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### முடிவுரை

யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது, சாதாரணமாக புவியில் உள்ள இயற்கை வளமான நீர் பல்வகை கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இக்கட்டுரையானது பண்பாட்டு வியாக்கியானம் மீதே அதிக கவனம் கொண்டு குவிமையப்படுத்துகையில் சமூகம் சார்ந்த சில விடயங்கள் காட்சிக்கு இல்லாமல் போய் சில மட்டுப்பாடுகளை ஏற்படுத்தி விடுகின்றது. ஆனால் அவை தனித்து ஆழமாக ஆராய வேண்டியது. உதாரணமாக நீரானது மரணத்தினால் பெறும் துடக்கினைப் போன்றோ சாதிய அடுக்கமைவில் தாழ்த்தப்பட்ட சாதியினரது உடமையான நீரானது உயர் சாதியினருக்கு தீட்டு அல்லது துடக்குப் பொருளாக தென்படும் நிலை அதே

வேளை உயர் சாதியினரது உடமையான நீரானது தாழ்த்தப்பட்டோருக்கு வேண்டாப் பொருளாகவும், மறுக்கப்படு பொருளாகவும் தென்படும் நிலை உதாரணமாக யாழ்ப்பாண சமூகத்தில் உயர் சாதியினரது கிணற்றில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நீர் பெறும் உரிமை மறுக்கப்படல் சிறந்த எடுத்துக்காட்டு. இது நீர் பற்றிய சமூக ரீதி யான பார்வையை குறிப்பாக அசமத்துவ அணுகுமுறையில் (Inequality approach) ஆய்வுசெய்ய வேண்டியது. இதற்கு அப்பால் குடிநீர்ப் பிரச்சினை, மரபு வழிப் பிரதேசங்களில், பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் நீர் வளம் குன்றுதல், இப்பிரதேசங்களில் இவ்வளங்களின் மீதான வெளித் தேசத்தவரின் அதீத பாவனை, மேலாட்சி, ஏற்றுமதி செய்தல் முதலான நீர் சம்பந்தமான பல சமூக பிரச்சினைகளும் ஆழமாக ஆய்வு செய்யவேண்டியே உள்ளன. ■

# மரணிக்க வேண்டும்

முள்குத்திய வலியைக்கூட
தாங்கமுடியாது முகாரிராகம்
இசைப்பவள் எனதுமகள்

ஷெல்விழுந்து கால்கள் சிதறிய
வலியை எவ்வாறு தாங்குவாள்
அவளின் உடல்வலி கண்டு – எனது
தாயுள்ளம் வலிக்கிறது

போர் அரக்கன் சப்பித்துப்பிய
எச்சங்களான நாங்கள்
ஓட முடியாது அவ்விடத்திலே
கிடக்கின்றோம்

எனது கண்ணீர் வெள்ளம் மகளின்
காயத்தைக் கழுவுகின்றது – அந்தப்
புண்ணீரைக் குடித்து புற்களும்
செந்நிறமாயின.

குருதிவற்றியது – எனது
சோகத்தின் சுருதியோ முற்றியது
அருகில் கிடக்கும் கற்களால்
மனதை நிரப்பிக் கொள்கிறேன்

வாழ்வின் இறுதியில் இருந்துகொண்டு
இறைவனிடம் ஒருவரங் கேட்கிறேன்
மயங்கிக் கிடக்கும் எனது மகள்
இக்கணமே, இவ்விடமே
மரணிக்க வேண்டும்.

'தும்பிளுவில் ஜெகா'



## பதிவு


**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை 25.04.2010 அன்று கலாபூஷணம், பன்மொழிப்புலவர், தமிழ்மணி த.கனகரத்தினம் அவர்கள் எழுதிய "செந்தமிழ் வளம்பெற வழிகள்" நூல் வெளியீடு சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.**







இந்நூலானது அனைவருக்கும் பயனுள்ள நூலாக காணப்படும் வேளை பாட நூல்கள், பத்திரிகைகள், பகிரங்க அறிவுறுத்தல் என்பவற்றில் காணப்படும் பிழைகளை எவ்வாறு திருத்துதல், மொழிபெயர்ப்பு இடர்பாடுகள், கலைச்சொல்லாக்கம், பலமொழியாராச்சிகள், சிங்களத் தமிழ் ஒற்றுமை வேற்றுமைகள் என்ற பல விடயங்கள் விளக்கப்பட்டிருக்கின்ற இப்புத்தகமானது காலத்தின் தேவை கருதி எழுதப்பட்டதாகக் காணப்படுகின்ற வேளை புலவர் அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு இலவசமாக கொடுக்கப்பட்ட ஒரு தொகை நூல்களால் பெறப்பட்ட பணம் முழுவதும் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் அதிபர் வணபிதா ஜேசுதாசன் அடிகளாரினால் பராமரிக்கப்படும் 109 மாணவர்களின் வாழ்க்கை வகிபாக்கியத்திற்கு வழங்க தமிழ்ச் சங்கம் முன் வந்தமை. ஓர் சிறப்பு நிகழ்வாக காணப்படுகின்றது. இம்மாணவர்களில் 71 மாணவர்கள் இடர் அனர்த்த முகாமில் இருந்தும் மற்றைய மாணவர்கள் சுனாமியினாலும் தமது தாய், தந்தையார்




அன்றேல் தாய் அல்லது தந்தையரை இழந்து நிர்க்கதியானவர்கள் என்பது மிக முக்கியமானது. இம்மாணவர்களின் பராமரிப்பு செலவிற்கு மாதாந்தம் ரூபா 350,000/= செலவு செய்யப்படும் வேளையில் இப்புத்தக வெளியீட்டால் பெறப்படும் தொகை சிறிய தொகையாக இருப்பினும் பல மனித நேய நிறுவனங்களுக்கும் மனித நேய உள்ளம் படைத்தவர்களுக்கும் செய்தி சென்றடைவதை நோக்கமாக கொண்டு இப்புத்தக வெளியீடு அமைந்திருந்தது காணக் கூடியதாக இருக்கின்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வேளை கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, கொழும்புத் தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா, கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் வைத்திய கலாநிதி ஜின்னாஹ் ஷரீபுத்தீன், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.வி.கைலாயபிள்ளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் திரு.வி.ஏ.திருஞானசுந்தரம், கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை, கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் திரு.சி.பாஸ்க்கரா ஆகியோர் உரையாற்றினார்கள்.


---

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் பேரவையின் ஏப்ரல் மாத நிகழ்வாக மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் சில ஆய்வுசெய்யப்பட்டன. கடந்த 25.04..2010 ஞாயிறு அன்று அன்று மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கலாநிதி செ.யோகராசா அவர்கள் தலைமை தாங்கினார். மட்டக்களப்பிலிருந்து இன்று பல சவால்களுக்கு மத்தியில் வருகை தந்துகொண்டிருக்கும் 'செங்கதிர்', 'தென்றல்', 'சுவைத்திரள்', 'மறுகா', 'கதிரவன்' ஆகிய நான்கு சஞ்சிகைகள் இந்நிகழ்வில் ஆய்வுசெய்யப்பட்டன. 'செங்கதிர்' சஞ்சிகையை கவிஞர் வெல்லவூர் கோபால் அவர்களும், 'சுவைத்திரள்' சஞ்சிகையை திரு.துரையப்பா அவர்களும், 'தென்றல்' மற்றும் 'மறுகா' சஞ்சிகைகளை திரு.வே.தட்சணாமூர்த்தி அவர்களும் ஆய்வு செய்தனர். பல சிரமங்களுக்கு மத்தியிலும் தவறாது வெளிவரும் இச் சஞ்சிகைகளுக்கு ஊக்குவிப்பாக இந்நிகழ்வு அமையலாயிற்று.












தொடர் நாவல்



எம்.பி.செல்லவேல்

# செங்கமலம் — 16

கல்யாணத்தரகர் விடுதியை விட்டுச்சென்றபோது இருட்டிவிட்டது. பின் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் சென்ற ரகுவுக்கு உளநல மருத்துவர் தன்னை தனியே அழைத்துச் சென்று கூறியவை ஞாபகத்திற்கு வந்தன. அதிர்ச்சியால் ஏற்பட்ட நிலை காரணமாக செங்கமலத்துக்கு இப்படியான நிலை ஏற்பட்டதாகவும், அது குணமாகலாம் அல்லது குணமாகாமல் போய்விடலாம் எனவும் உள நல மருத்துவர் கூறிய கூற்றுக்கள் படுக்கையில் கிடந்த ரகுவின் மனதை அரித்துக்கொண்டிருந்தது. வேதனையில் உழன்றான். நித்திரை வர மறுத்தது. அவளது நிலைக்குத் தானும் ஒரு காரணமாய் இருந்துவிட்டேனே என்ற குற்ற உணர்ச்சி அவனை உறுத்திக்கொண்டிருந்தது. இங்கு சரிவராமல் போனாலும் இந்தியாவிற்குக் கூட்டிச் சென்றாவது வைத்தியம் பார்த்தே ஆக வேண்டும் என்ற முடிவுடன் கடவுச்சீட்டுக்களை மறுநாள் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு கட்டினான். இதுபற்றி கணேசனின் உதவியைப் பெறவேண்டுமென்றும் என்ற முடிவுடன் புரண்டுபடுத்த ரகு அப்படியே தூங்கிப் போய்விட்டான்.

"கணேசன்! கணேசன்!" அழைக்கும் குரல் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். அவனது சக ஆசிரியனும் நண்பனுமாகிய பகீரதன் அவனை நோக்கி வந்தான். "எப்ப ஊரில இருந்து வந்தனி!" பகீரதன் கேட்டான். "வந்து ரெண்டு நாளாச்சு. லண்டனிலிருந்து வந்த எனது நண்பனை ஊருக்கு கூட்

டிப் போனனான். இரண்டு கிழமை அவனோட அங்க இருந்தனான். அதோட இனி சம்பள நாளும்தானே" கணேசன் பதிலளித்தான். "பள்ளிக்கூடத்துப் புதினங்களை அறியவில்லையோ!" பகீரதன் புதிர் போட்டான்.

"பகி! எனக்கு ஒன்றும் தெரியாது. ஏதும் விஷேசமோ!" கணேசன் ஆவலுடன் கேட்டான்.

"நம்மட திவாகரனுக்கும், யசோதா ரீச்சருக்குமிடையில இருந்த காதல் கந்தலாய்ப் போயிற்று" பகீரதன் சோகத்துடன் கூறினான்.

"இரண்டு பேரும் இலட்சியக் காதலர்களாகத்தானே இருந்தார்கள். நானின்றி நீயில்லை! நீயின்றி நானில்லை என்கிற மாதிரித்தானே அவர்கள் நடத்தை இருந்தது. பிறகு ஏன் இப்படி யாயிற்று"

"ரீச்சரின் வீட்டில்தான் பெரிய பிரச்சினையாய்ப் போயிற்று, பிரதேசவாதமும் சமூக அந்தஸ்து வேறுபாடும் தான் இதற்குக் காரணமாயிருந்ததாகக் கதை வந்திருக்கு" பகீரதன் கூறினான்.

"நீ என்ன சொல்லிறாய்! எனக்கு ஒன்றும் விளங்கேல்லை" கணேசன் கூறினான்.

"வடக்கும் கிழக்கும் தான் இந்த பிரதேசவாதம். திவாகரன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவனாம். தங்கட சாதி சனத்தோட ஒப்பிடும்போது சமூக அந்தஸ்தும் குறைந்தவனாம் என்று ரீச்சரின்ட பெற்றோர் மறுத்து விட்டாங்கள்" பகீரதன் தான் அறிந்து கொண்டதைக் கூறினான்.

"அப்படியென்டால் ரீச்சர் என்ன சொன்னாவாம்!" கணேசன் வினவினான்.

"ரீச்சருக்கு பதிவுத் திருமணம் முடிந்துவிட்டதாம். யாரோ வெளிநாட்டு மாப்பிள்ளையாம். அதோட அவங்கட சொந்தக்காரராம். இனி ரீச்சர் வேலைக்கு வரமாட்டாவாம். விரைவில் வெளிநாடு போக இருக்கிறாவாம் என்றும் அறிந்தனான்" பகீரதன் தான் அறிந்த செய்திகளைக் கூறினான்.

"படித்தவர்களிடம்கூட இப்படிப் பிரதேசவாதமும், சமூக ஏற்றத்தாழ்வு எண்ணங்களும் நிலைத்திருக்கும் வரை தமிழ் இனத்துக்கு எப்படி விடிவுவரப் போகிறது? வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசம் வேண்டுமென்று ஊளையிடுவது, தமிழினத்துக்குள்ளேயே ஆண்ட பரம்பரை, ஆளப்படும் பரம்பரையொன்றைப் பரவலாக்குவதற்கா? அன்று தமிழனைக் காட்டிக்கொடுத்தான் ஒரு எட்டப்பன். இன்று தமிழனைக் காட்டிக் கொடுக்க ஆயிரம் புல்லுருவிகள் எழுந்திருக்கிறார்களா? நமக்குள்ளே எத்தனை கட்சிகள், எத்தனை பிரிவுகள், எவரெவருக்குப் பின்னால் வால் பிடிக்கும் சுயநலமிகள்! மக்களைக் காவு கொடுக்கும் இயக்கங்கள்" உணர்ச்சி பீறிட கணேசன் பொரிந்து தள்ளினான்.

"ஒற்றுமையைப் பற்றி நம்மவர்கள் வாய் கிழியக் கத்துவார்கள். கத்தினவனே ஒற்றுமையை தனது வாழ்க்கையில் கடைப்பிடிக்கமாட்டான். தனது சுயநலத்துக்கு ஒற்றுமை பாதிப்பை



ஏற்படுத்துமாயின், அதனைத் தூக்கி எறியவே தயங்கமாட்டான் நம்ம ஆள். அப்படி இரத்தத்தோடு இரண்டறக் கலந்து கிடக்கும் ஒற்றுமையீனங்களும் சுயநல எண்ணங்களும் இருக்கும் போது எமக்கு அழிவுதான் எஞ்சுமே தவிர வேறெதுவும் கிடைக்கப் போவதில்லை" பகீரதனும் தனது கருத்தை முன்வைத்தான்.

"அது சரி திவாகரனின் நிலை எப்படியிருக்கு? அவன் இந்த விஷயத்தை அறிந்தானா? அல்லது இன்னும் ரீச்சரை நம்பிக்கொண்டுதான் இருக்கிறானா?" கணேசன் வினவினான்.

"திவாகரனுக்கு இந்த விசயம் தெரியும். ஆரம்பத்தில் சோகத்துடனும் துன்பத்துடனும் தாடி வளர்த்துக் கொண்டு திரிந்தான். ஆனால் நானும் மற்றும் சக ஆசிரியர்களும் அவனைச் சந்தித்து அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவனுக்கு மன உறுதியை வளர்க்க உதவினோம். இப்போ அந்த எண்ணங்களிலிருந்து விடுபட்டு தேறியுள்ளான்" பகீரதன் கூறினான்.

"இப்பவும் பழைய வீட்டில தானே இருக்கிறான். நான் அவனைப் போய் பார்க்கவேண்டும்" கணேசன் கேட்டான்.

"ஆம்! அங்குதான் இருக்கிறான். பின்னேரம் என்றால் 4 மணியளவில் நானும் வாறன்" இருவரும் அவனைச சந்திக்க 4 மணியைத் தீர்மானித்தனர். பின்னர் இருவரும் பிரிந்து சென்றனர்.

ரகு கணேசனின் வருகைக்காகக் காத்திருந்தான். கணேசன் வந்ததும், செங்கமலத்தை இந்தியாவுக்குக் கூட்டிச்சென்று சிகிச்சையளிக்க, தான் விரும்புவதாகவும் அதற்கு கடவுச்சீட்டை இலகுவாகப் பெற வழிவகை ஏதாவது உள்ளதா என்றும் கணேசனிடம் ரகு கேட்டான்.

பிரயாண முகவர் ஒருவரைத் தெரியுமென்றும், அவரிடம் சென்று விடயத்தை கதைத்துப் பார்ப்போம் எனவும் கூறிக் கணேசன் ரகுவை அவரிடம் அழைத்துச் சென்றான். விடயங்களை அறிந்துகொண்டதும், பிரயாண முகவர் "பணம்தான் அதிகமாகச் செலவாகும் தம்பி" என்றார்.

"பணத்தைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை. சரியான கடவுச் சீட்டு கிடைத்தால் போதும்" ரகு கூறினான்.

"எவ்வளவு நாட்களுள் பெற்றுத் தருவீர்கள்?" ரகு வினவினான்.

"எப்படியும் நான்கு நாட்கள் எடுக்கும்" முகவர் பதிலளித்தார். ரகுவும் அதற்குச் சம்மதித்துக் கொண்டான்.

"தம்பி இந்த இரண்டு கடவுச் சீட்டு விண்ணப்பப்பத்திரங்களையும் நிரப்பி மூன்று மூன்று அவர்களின் புகைப்படப் பிரதிகளையும் கொண்டு வாருங்கள்" முகவர் கூறியபடி விண்ணப்பப் பத்திரங்களைக் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக்கொண்டு கணேசனும் ரகுவும் புறப்பட்டனர்.

அன்றைய நாளும் ஓடி மறைந்தது. மறுநாள் சம்பளநாளாயிருந்ததால் கணேசன் பாடசாலைக்குப் புறப்பட்டுப் போனான். அங்கு அவனுக்காகக் காத்திருக்கும் அதிர்ச்சியை அறியாமல் அவனும் பாடசாலைக்குப் பயணமானான். பாடசாலை கொழும்பு நகருக்கு வெளியே அமைந்திருந்தது. அந்த அரசாங்கப் பாடசாலை முன்பொருகால் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. இனக் கலவரங்களின் பின் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து சோபையிழந்த நிலையில் காணப்பட்ட அப்பாடசாலை இப்போது படிப்படியாக அபிவிருத்தியின் நிலையில் காணப்பட்டது.

கணேசன் பாடசாலையினுள் நுழைந்தபோது, அங்கு சக ஆசிரியர்கள் பலர் வருகை தந்திருந்தனர். நீண்ட காலத்தின்பின் ஒருவரையொருவர் சந்திப்பதால் சந்தோஷத்துடன் ஒருவரையொருவர் வரவேற்று அவர்தம் குடும்பநலன்களையும், ஊர்ப்புதினங்களையும், நாட்டு நடப்பையும் அறிந்துகொள்ள அளவளாவினர். அவ்வேளையில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் அலுவலகத்தில் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது.

கூடியிருந்த ஆசிரியர்கள் மத்தியில் திவாகரன் ஆசிரியரதும் யசோதா ஆசிரியையினதும் கதைகள் கிசுகிசுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வடக்கு மண்ணின் வாசனை கொண்ட ஆசிரியர்கள் யசோதா ஆசிரியையின் பெற்றோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் சரியானவை என வாதம் புரிந்தனர். சமுதாய நலன் விரும்பிகளாகவும், தமிழ்ச் சமுதாயத்தின் ஒற்றுமையை விரும்புபவர்களாகவும், முற்போக்கு எண்ணங்கொண்டவர்களாகவும் உள்ள ஆசிரியர்கள் சிலர் திவாகரன் ஆசிரியருக்கு அநீதி, நம்பிக்கைத் துரோகம் என்பவற்றைக் காதலின் பெயரால் யசோதா ஆசிரியை ஏற்படுத்தியது தவறெனக் குற்றம் சாட்டினர்.

சம்பளம் பெற்றுக்கொள்ளும்படி அதிபரின் அலுவலகத்திலிருந்து அறிவித்தல் வந்தது. நேரமும் மதியம் பன்னிரண்டைத்தாண்டி விட்டதால் வீட்டுக்கு விரையும் எண்ணத்துடன் ஆசிரியர்களும் நான் முந்தி, நீமுந்தி என்று முண்டியடித்து அலுவலகத்தை நோக்கி விரைந்தனர்.

அலுவலகத்தினுள் சென்றதும் அங்கு அதிபர் இருந்தமையால் வரிசைப்பட்டு முறைப்படி கையெழுத்திட்டு தங்கள் தங்கள் சம்பளத்திற்கான காசோலையைப் பெற்றுக்கொண்டனர். கணேசனும் தனது முறை வந்ததும் கையெழுத்திட்டுக் காசோலையைப் பெற்றுக் கொண்டதும்,

"கணேசன் சேர்! உங்களுடன் முக்கியமான விடயமொன்று கதைக்க வேண்டியுள்ளது. ஆகையால் வீட்டுக்குப் போய்விடாதீர்கள். சம்பளம் கொடுத்து முடிந்ததும் அலுவலகத்துக்கு வந்து என்னைச் சந்தித்து விட்டுச் செல்லுங்கள்" அதிபரின் குரல் கணேசனின் கவனத்தை ஈர்த்தது.



"சரி சேர்!" பதிலளித்தான் கணேசன்.

சம்பளம் பெற்றதும் அதிகமான ஆசிரியர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிவிட்டனர். கணேசனும், அவனது சக நண்பனான பகீரதன் ஆசிரியரும் மாத்திரம் எஞ்சி நின்றனர்.

"என்ன முக்கிய விடயமாக உன்னுடன் பேச இருக்கிறார் அதிபர்?" பகீரதன் கேட்டான்.

"எனக்கு எதுவும் தெரியாது. அவர் சொன்னமாதிரி, அவரைச் சந்தித்தால் தெரிந்துவிடும்தானே! சரி! நான் அதிபரிடம் போகிறேன் நீ நின்றுகொள்" கூறிவிட்டு அதிபரின் அலுவலகத்தை நோக்கி விரைந்தான் கணேசன்.

அதிபரிடமிருந்து ஓர் அதிர்ச்சிகரமான தகவல் கிடைக்குமென எதிர்பாராது அவனது கால்கள் அதிபரின் அலுவலக அறையினுள் அடி எடுத்து வைத்தன.

(தொடரும்....)


## விரைவில் இலண்டனில் ஈழத்து தமிழ் நூற் கண்காட்சி – 2010

ஈழத்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும். அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச்சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப் பதிவுகள், சிறுசஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு... என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புக்களுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம். அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புக்களையும் அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்குத் தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகட்கு : *R.Mahendran (முல்லை அமுதன்)*
*34, Red Riffe Road, Plaistow,*
*London*
*E13, OJX*
*Tel : 0208 5867783*
*E-mail : mullaiamuthan_03@hotmail.co.uk*

# புவியில் சுருங்கும் பசுமைப் போர்வை

**பிரகாஷ்னி மோகன்பிறேம்குமார்**
புவியியல் சிறப்புக்கற்கை, 3ம் வருடம்,
கிழக்குப் பல்பலைக்கழகம்

(...சென்ற மாதத் தொடர்ச்சி)

**காடழிப்பும், உயிரினங்கள் அழிதலும்**

உலகில் தாவரங்கள், விலங்குகளை உள்ளடக்கிய 5-80 மில்லியனுக்கு இடைபபட்ட உயிரினங்கள் உயிர்ப்பல்வகைமையில் புவியை அலங்கரித்து நிற்கின்றது. அயனக் காடுகளின் போர்வை புவியில் மொத்தப் பரப்பில் 7 சதவீதமாகும். உயிர்ப் பல்வகைமையில் 50% ஆனவை, இக்காடுகளிலேயே வாழ்கின்றன. USNAS (U.S. National Academy of Science) இன் அறிக்கையின்படி ஒவ்வொரு நான்கு சதுர மைல் மழைக்காட்டுப் பகுதியில் 1500க்கு மேற்பட்ட பூக்கும் தாவர இனங்களும், 750 இன மரங்களும், 125 முலையூட்டி வகையைச் சேர்ந்த விலங்குகளும், 400 பறவையினங்களும், 60 வகையான நிலத்திலும் நீரிலும் வாழும் ஜீவராசிகளும், 150 வண்ணத்துப்பூச்சி இனங்களும் தங்கி வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அயன மழைக்காடுகளின் அழிவினால் ஒவ்வொரு நாளும் உயிரினங்கள் மறைந்துகொண்டே செல்கின்றன. அவை எவ்வளவு என்பது எமக்கு சரியாகத் தெரியாத போதும் நாள் ஒன்றுக்கு 137 உயிரினங்கள் அழிவடைந்து விடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (Stork 1996, Rainforest Action Network 1998)

இவ்வாறாக காடுகள் தொடர்ந்தும் அழிக்கப்படுவதானால் விலங்கினங்கள் தமது இருப்பிட வசதிக் குறைவதனால் இடப்பெயர்வினை மேற்கொள்ள வேண்டியது தவிர்க்கமுடியாததாகின்றது. குறிப்பாக 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட டைனோசர் விலங்கினம் தற்போது இல்லை. இதேபோலவே கலிபோர்னியாவில் ஒருவகைக் கழுகினப் பறவையான (Vulture) கொண்டோர் (Condors) பல மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்துவந்தன. இதன் பலமானது யானை மற்றும் வங்கச் சிறுத்தை ஆகியவற்றுக்குச் சமமானது என்பர். இதனை அழியவிடாது மீன் மற்றும் கொடுவிலங்கு சேவையகம் கடைசி மூன்று பறவையினைப் பிடித்து தேசிய பறவைகள் சரணாலயத்தில் வளர்ந்து தற்போது 60 பறவைகளாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் வடமேற்கு பசுபிக் காடுகளில் புள்ளிகள் கொண்ட ஆந்தை (Spolted Owl) இனம் அழிவதை அறிந்து காடுகளை வெட்டுபவர்களை



எச்சரித்துள்ளதுடன் காடுகளை அழித்து மரங்களை வெட்டுவதன்மூலம் இந்தப் பறவை இனங்கள் கொல்லப்பட்டால் மரண தண்டனை விதிக்க ஆதரவு தேடுவேன் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தேர்தல் பிரா சாரத்தின் போது கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கையில் காடழிப்பு**

இலங்கையின் காடழிப்பினை இருவேறு கட்டங்களாக நோக்கக் கூடியதாகவுள்ளது. முதலாவது கட்டத்தில் மேற்கு ஐரோப்பாவின் பெருந்தோட்ட நடவடிக்கைகளின் ஆரம்பம் எனும் வகையிலும், 2ஆம் கட்டத்தில் அரசாங் கத்தின் வறண்ட வலயக் குடியேற்றத் திட்டங்கள் எனும் ரீதியிலும் நோக்கப் படுகிறது. இலங்கையில் மகாவலி அபிவிருத்தித் திட்டமானது உலர் வல யத்தில் ஆரம்பிக்கப்பட்டதால் காட்டுவளம் மிகத் தீவிரமாக அழிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 40 இலட்சம் காட்டுநிலப்பரப்பு அழிக்கப் பட்டுள்ளது.

மேலும், காணிக் குடியேற்றமும், கிராமிய விஸ்தரிப்புத் திட்டமும் என்பதின் கீழும், வீடமைப்புத் திட்டங்கள், கிராமிய வறுமை, சனத்தொகை வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, மரம்வெட்டும் தொழில், கைத்தொழில் நட வடிக்கைகள், கால்நடை விவசாயம் போன்ற காரணங்களுக்காகவும், நெடுஞ் சாலைகள் போக்குவரத்துப் பாதைகள் உருவாக்குவதற்காகவும், தொழிற்சா லைகள் கைத்தொழிற்பேட்டைகள், நீர் சேமிப்பு, நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்காகவும் பெருமளவு காடுகள் இலங்கையில் அழிக்கப்படுகின்றன. இத்தகைய பசுமைப்போர்வை நீக்கமானது மனிதனுக்கும் சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

**காடுகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்**

காட்டு வளத்தினைப்பேண உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். குறிப்பாக காடழிப்பவருக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கவும், குறைந்து கொண்டுவரும் காடுகளைப் பாதுகாக்கவும், இழந்துபோன காடுகளுக்கு ஈடான காடுகளை உண்டாக்கவும் முயற்சி எடுக்க வேண்டும். மேலும் காட்டுவளத்தைப் பெருக்க காடுகளைப் பாதுகாக்கும் சட்டம், காடழிக்கப்பட்ட இடங்களில் மீள்நடுகை, விவசாய வனவளர்ப்பு முறைமை ஊக்குவிப்பு, விறகிற்கு பதிலாக மாற்று எரிபொருள் பாவனை என்பனவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

காடுகளை உயிரியல் முறையில் பாதுகாத்து முகாமைப்படுத்தல், காட்டுவளத்தில் தங்கியிருக்கும் உற்பத்திகளுக்கு உள்ளூர் வளம் மூலம்

மூலப்பொருள் பெறல், நாட்டின் பொருளாதாரத்தில் காட்டின் பங்கினை அதிகரித்தல், இயற்கைவன ஒதுக்குகள், காடுகள் போன்றவற்றை கண்காணிப்பதற்கு பல நிறுவனங்களை உருவாக்குதல், காட்டு வளங்களை முறையாக முகாமை செய்வதற்காக தகுதிவாய்ந்த அதிகாரிகளை நியமித்தல், காடுகளைப் பாதுகாப்பதற்கும் அதன் முக்கியத்துவம் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளுதல்.

காடுகளைக் குடைந்து அழித்து அவ்விடங்களில் மறைவாகப் போதைப் பயிர்களைப் பயிரிடுவோரையும், அவற்றினைக் கடத்துவோரையும் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் காட்டுத்தீ பரவுதலைக் கண்காணித்து அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

மேலும் கிராமப் பகுதிகளில் வனவள இலாகா, மரக்கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றை நிறுவி அதற்கான அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் காடழிவினைத் தடைசெய்தல். 'நிழல் வலயங்கள்' அமைத்தல், மீள்காடாக்கத்தினை துரிதப்படுத்தல், உயிரின சரணாலயங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் காடுகளைப் பாதுகாக்கவும், காடழிவினை தவிர்க்கவும் முடியும்.

காடுகள், புவியின் விலைமதிக்க முடியாத சொத்துக்கள். எனவே நிலைத்திருக்கும் அபிவிருத்தியை கருத்தில்கொண்டு புவியில் பசுமைப்போர்வை அழியாது பேணிப்பாதுகாப்பதும் அதன் மீது அக்கறை கொண்டு செயற்படுவதும் எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். ■


### ***Reference***


1. குணராசா.க.(2006), சுற்றுச் சூழலியல், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
2. Chandrasekaran.P. (1996), 'Environmental Pollution', T.K.Publishes, Madras
3. People's Bank, Economic Review No.01, 22 April 1996.


### ***Websites Reference***


1. http://www.rainforestinfo.org
2. http://forests.org
3. http://www.rcfa-cfan.org




## விளாசல் வீரக்குட்டி

மிதுனன்

என்ன சிதம்பரம், ஆட்டுப்பட்டிய எங்கால சாச்சிக்கொண்டு போறா, மேச்சலுக்குடவா? அதென்ன கையில என்னவோ நோட்டிஸ் மாதிரித் தெரியிது, மேதினக் கூட்ட நோட்டீசா?
மேதினமெண்டா என்னடாப்பா? 'மே'யெண்டா ஆடுகள் கத்திறதானாக்கும். உனக்குப் புடிபட்டது அவ்வளவுதான். மேதினமெண்டு இந்தத் தொழிலாளர் தினத்தத்தான் சொல்லுற வைகாசிதினமெண்டா ஒருவனுக்கும் தெரியா. எலலாம் ஆங்கிலமயமாப் பொயித்து.
அமெரிக்கா நாட்டில சிக்காக்கோ எண்டுற இடத்தில தொழிலாளிகள் நடத்தின போராட்டம் கேள்விப்பட்டிருக்கிறயா, முதலாளிமாருக்கு எதிராக எட்டுமணி நேரம் வேல கேட்டுப் போராடின தொழிலாளிகளெல்லாம் சுட்டுப் பொசுக்கின நாள் தான்டாப்பா! கணக்கப்பேர் செத்துப் போனாங்க! அது எப்பவோ முடிஞ்ச கத!
ஆனா தினமும் இஞ்ச நம்மட நாட்டில எத்தின தொழிலாளிகள் தினமும் செத்துப் புழச்சிக்கொண்டிருக்கிறாங்க. அது கூட்டம் வெய்க்கிறவங்களுக்குத் தெரியுமோ தெரியா?
ஆயிரமாயிரமா தொழில்சாலைகளில, பெரியபெரிய ஹொட்டல்கள்ள, அச்சகம், சில்லறக்கட, புடவக்கடெண்டு பொம்புளயளும் ஆம்பிளயளும் முதலாளிமார்ட கொடுமையால படுற துன்பம் இவனுகளுக்குத் தெரியுமா?
முதல்ல இஞ்ச இதுக்கெதிராக நாமெல்லாம் சேர்ந்து ஒரு போராட்டம் நடத்த வேணும். அது எந்தமாதத்தில வந்தாலும் சரி, கலகம்புறந்தாத்தான் டாம்பி ஞாயம் கிடைக்கும். மேதினக் கூட்டத்துக்கு வருவாதானே! அங்க மேடையில ஆடுகத்திறாப்ப கத்திறானுகளோ? நாய் குரைக்கிறமாதி குலைக்கானுகளோ பாப்பமே! நான் முந்திறன். நீ புறகு வாவன்! என்ன சரிதானே!




செங்கதிரில் நேர்காணல் என்று ஒரு பகுதியினை ஆரம்பிக்கலாம் என்பது எனது ஆலோசனையாகும். கலை, இலக்கியத்தில் அல்லது வேறு துறைகளில் பிரபலமானவர்களின் விபரங்களை நேர்கண்டு 4 பக்கங்களுக்கு மேற்படாமல் பிரசுரிக்கலாம். கேள்வி – பதில் மூலம் விபரங்களை வெளிப்படுத்தும் போது அதில் சுவாரஸ்யம் அதிகமாக இருக்குமென்பது எனது எண்ணமாகும்.

தமிழ்நாட்டு சஞ்சிகைகளின் ஸ்டைலில் நகைச்சுவைத் துணுக்குகளை ஆங்காங்கே சேர்த்துக்கொள்வது நல்லது. சிறுவயதில் நாம் குமுதம், கல்கி வாசிக்கும் போது முதலில் நகைச்சுவைத் துணுக்குகளைப் பார்த்துச் சிரித்துவிட்டுத்தான் ஏனைய ஆக்கங்களை வாசிப்பது வழக்கம். (தற்போது இலங்கையில் தமிழ்ச் சஞ்சிகைகள் பிரபலமாகிவிட்டதால் தமிழ்நாட்டு சஞ்சிகைகளை வாசிப்பது குறைந்துவிட்டது.) "பின்தங்கிய தமிழ்ப் பிரதேச" மக்களின் பிரச்சனைகளை ஆக்கங்களின் மூலம் வெளிக்கொணர்ந்தால் அது அம்மக்களுக்குச் செய்யும் பேருதவியாக அமையும்.

பொதுவாக செங்கதிரில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் தரமுள்ளவையாக இருப்பதால் இது ஒரு தரமான சஞ்சிகை என்று துணிந்து கூறிவிடலாம். ஆனால் சிறுகதைகளுக்கான படங்கள் மேலும் உயிரோட்டமாக இருப்பது அவசியம்.

**கா. தவபாலன்**

*404a - ARC Qrs, Gannoruwa. Peradeniya.*

---

தங்களின் 'மார்ச்' இதழ் கிடைத்தது. மகிழ்ச்சி. அடக்கத்திலும் அச்சு முறையிலும் 'செங்கதிர்' அழகாக இருக்கிறது. மிகவும் பெருமை. பல்துறை விற்பன்னர் 'அன்புமணி' அவர்களின் விபரம் கண்டேன். "எனது வாழ்வு பயனுள்ளதாக எனும் கேள்வி எழுகிறது" என 'அன்புமணி' அவர்கள் சொல்வது அவர் அடக்கத்தைக் காட்டுகிறது. நிறைகுடம் தளம்புவதே இல்லை. வாழ்க 'அன்புமணி' எனும் எமது ஆசான்.

**M. குலமணி**

*19 - 5/4, பிரெட்றிசா வீதி, கொழும்பு - 06.*

---

2010 மார்ச் செங்கதிர் மகளிர் சிறப்பிதழாக மிகவும் காத்திரமான கட்டுரை, சிறப்புச் சிறுகதை ஆகியவற்றுடன் வெளிவந்து எல்லோரதும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளது.

**- அன்புமணி -**



## "செங்கதிர்" கட்டண விபரம் (2010) : (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| ஓராண்டுக் கட்டணம் | 1000/- | 500/- | US $ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US $ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US $ 50 |
| | அரை | 3000 | 1000 | US $ 30 |
| முன் அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US $ 30 |
| | அரை | 2000 | 750 | US $ 20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US $ 20 |
| | அரை | 1500 | 500 | US $ 15 |

### அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

**வங்கி** : மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.

**கணக்கு இல** : <u>113100138588996</u> (நடைமுறைக்கணக்கு)

**காசுக்கட்டளை** : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

காசோலைகள் / காசுக்கட்டளைகளை **த. கோபாலகிருஷ்ணன்** என்று பெயரிடுக. அல்லது பணமாக ஆசிரியரிடம் நேரிலும் வழங்கலாம்.

---

அன்புடையீர்,

**தயவு செய்து 2010ம் ஆண்டுக்குரிய சந்தா 1000/= தைச் செலுத்தி 'செங்கதிர்' இன் வரவுக்கும், வளர்ச்சிக்கும் உதவுங்கள். நன்றி.**

**ஆசிரியர் : செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன்.**

# ஹனா கிராபிக்ஸ்
# Hana Graphics

நூலகம்

## எமது சேவைகள்

தரமான சேவையை மலிவாகப் பெற்றுக் கொள்ளுங்கள்...!



கறுப்பு - வெள்ளைப் புகைப்படத்தை வர்ணமாக்குதல்








நீங்கள் விரும்பிய பின்னணியில் உங்கள் புகைப்படத்தைப் பொருத்துதல்.





புகைப்படத்தில் இருப்பவரை ரேகைச் சித்திரமாக்கி நிறந்தீட்டுதல்



வியாபாரம் மற்றும் தொழில் சம்மந்தமான விளம்பரங்களை வடிவமைத்தல்

புகைப்படத்தில் உள்ள உங்கள் முகத்தில் காணப்படும் தேவையற்ற புள்ளிகள், பருக்கள் என்பன நீக்கப்பட்டு அழகாக மாற்றப்படும். மற்றும் அனைத்துவிதமான வடிவமைப்புக்களும் மிகவும் குறைந்த விலையில் செய்து தரப்படும்.

இதைத் தவிர பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் அழைப்பிதழ்களும் மற்றும் அனைத்துவிதமான அழைப்பிதழ்களும் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

கல்யாண மற்றும் பூப்புனித நீராட்டு ஆல்பம் சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

சிங்களத்தில் இருந்து தமிழுக்கு, மற்றும் தமிழில் இருந்து சிங்களத்திற்கும் கடிதங்கள், விபரங்கள் மொழிபெயர்ப்பு செய்து தரப்படும்.

**இல.15, டயஸ் வீதி, மட்டக்களப்பு.**

தொடர்புகளுக்கு : +94 652224820 / +94 719105237

மின்னஞ்சல் : hanags21@yahoo.com



Sun Printers - Batticaloa. 065-2222597